Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 21 வியாழக்கிழமை (05-07-2001)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:221

# வடக்கில் நாளை பூரண ஹர்த்தாலுக்கு 10 தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை5

அரச படைகளின் மனித உரிமை மீறல்களை - குறிப்பாக தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இழைக்கப் பட்டுவரும் பாலியல் வன்முறை களை - கண்டித்து நாளை முழு நாளும் வடக்கு - கிழக்கு, மலை யகம் மற்றும் கொழும்பில் பூரண ஹர்த்தால், கடையடைப்பு, பகிஷ் கரிப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பொதுமக் களைக் கோரியிருக்கின்றது.

கொழும்பில் நாளை இது தொடர்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற் பாடு செய்யப்பட்டுள்ளபோதிலும் வடக்கில் அமைதியாக - பிரார்த் தனை நடவடிக்கைகளில் ஈடுபடுவ தோடு - இந்த ஹர்த்தால் அனுஷ் டிக்கப்படும் என்று பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தெரிவித் துள்ளது.

இது தொடர்பாகக் கூட்டமைப் பின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் யாழ்.மேயரு மான என்.ரவிராஜ் தெரிவித்திருப்ப தாவது:-

"யாழ். தீவக மக்களுக்கு பத்துக் கட்சி கூட்டமைப்பு சார்பில் ஓர் அன் பான வேண்டுகோள்!

தமிழ் பேசும் மக்கள் நாளை தங்கள், இன ஒற்றுமையைப் பிரதி பலித்தும் மனித உரிமைமீறல் களை குறிப்பாகப், பாலியல் வன் முறையைக் கண்டித்தும் அமைதி யாக, அஹிம்சை வழியிலே தங்கள் வடுகளில் இருந்து அமைதிப் பிரார்த் தனையில் ஈடுபடுவதன் மூலம், இலங்கை அரசாங்கத்திற்கும், சர்வ தேச சமூகத்திற்கும் தங்களது உணர்ச்சிகளைத் தெரியப்படுத்த வேண்டும்.

மேலும், எந்த ஒரு வன்முறை நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் தங்கள் வீடுகளில் இருந்து பகிஷ் கரிப்பு, கடையடைப்புகளில் ஈடுபடு மாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தாலைக் கைவிடுமாறு ராணுவத் தரப்பு வற்புறுத்து

### தமிழ்க் கட்சிகள் திட்டவட்டமாக மறுப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை5

யாழ் நகரில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை நேற்று அழைத்துப் பேசிய 51ஆவது படையணியின் உயர் இராணுவ அதிகாரிகள் நாளை வடக்கில் அந்தக் கட்சிகளின் ஏற் பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருக் கும் ஹர்த்தாலைக் கைவிடும்படி அவர்களை வற்புறுத்தினர்.

ஆனால் அஹிம்சை ரீதியில் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்குத் தாங்கள் ஒழுங்கு செய்திருக்கும் இந்தக் ஹர்த்தாலை யாரும் தடுக்க முடியாது; அது எமது ஜனநாயக

(14ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகால நீடிப்புப் பிரேரணையை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்காது

## மாற்றுவழி குறித்து ஆராய்வு

கொழும்பு,ஜூலை5

**நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை இழந்துள்ளதால் அவசர காலத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணையை அங்கு வெற் றிகரமாக நிறைவேற்ற முடியாத பிரச்சினையை எதிர்நோக்கும் அரசு, அப் பிரேரணையை இப்போதைக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில்லை என்று தீர்மானித்திருக்கின்றது.**

அவசரகாலத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான - வழமை யான - பிரேரணை நாளை நாடாளு மன்றத்துக்கு வருமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட தீர்மானம் ஒன்றின் பிரகாரம் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் நாளை மறு தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் காலாவதியாகின்றது.

சபையில் பெரும்பான்மையை இழந்துள்ள அரசு இத்தினத்துக்கு முன்னர் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்ற முடி யாத நிலையில் உள்ளது.

இதனால் நாளை மறுதினம் நள் ளிரவு 12 மணியுடன் அவசரகாலச்

(14ஆம் பக்கம் பார்க்க)

அரசு - எதிர்க்கட்சிகளிடையே முரண்பாடு

## நம்பிக்கையில்லாப் பிரேரணை: விவாதம் குறித்து முடிவில்லை

கொழும்பு,ஜூலை5

நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்வது குறித்து அரசு மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக் கும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று சபாநாயகர் அனுரா பண் டாரநாயக்கா தலைமையில் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் நம்பிக் கையில்லாப் பிரேரணையை விவா தத்துக்கு எடுப்பது குறித்தும் ஆரா யப்பட்டது.

விவாதத்தை அடுத்த மாதம் 7 ஆம் திகதியிலிருந்துதான் நடத்த முடியும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி விடுதலை

சென்னை,ஜூலை5

கடந்த சனிக்கிழமை அதிகாலை சென்னையில் தமது வீட்டில் வைத்து மாநிலப் பொலிஸாரால் கைது செய் யப்பட்டு, சென்னை மத்திய சிறை யில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் முதலமைச்சரும், தி.மு.க.தலைவரு மான மு.கருணாநிதி நேற்று மாலை 5.20 மணியளவில் விடுதலை செய் யப்பட்டார்.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக் கள் தொடர்பான விசாரணை பூர்த்தி யடைந்து விட்டதால் அவரை விடு விக்கலாம் என்று நீதிமன்றத்தில் பொலீஸார் தெரிவித்த தகவலை அடுத்து, தேவைப்படும் போது விசா ரணைக்கு ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையோடு அவரை விளக்க மறியலில் இருந்து விடுவிக்கும் உத் தரவை நீதிபதி விடுத்தார்.

கருணாநிதியின் வயது மற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

மாணவர் மன்ற முன்னாள் செயலாளரான

## விஞ்ஞான பீட மாணவன் படையினரால் கைது!

காரைக்காலில் திங்கள் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கிருஷ்ணசாமி திவ் வியன் கடந்த 2 ஆம் திகதி படையி னரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இணுவில் காரைக்கால் பகுதி யில் வைத்து இவர் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

தற்போது இவர் காங்கேசன்துறை யில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள் ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

திவ்வியனின் கைதை எதிர்த்து

## பல்கலை மாணவர்களும் ஊழியரும் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டம்

### பிரதிநிதிகள் குழு காங்கேசன் சென்று அவரை நேரில் பார்த்தது

யாழ்ப்பாணம்,ஜூலை5

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளருமான கிருஷ்ண சாமி திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரி வித்தும் -

அவரை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் -

யாழ். பல்கலைக்கழக மாணவர் களும் கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களும் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து பல்கலைக்கழக முன் வாயில்கள் எவரும் உள்நுழையவோ, வெளியே றவோ முடியாதவாறு புதிய பூட்டுக் கள் கொண்டு பூட்டப்பட்டன.

தமது வகுப்புக்களையும், அலு வலகப்பணிகளையும் பகிஷ்கரித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

### கரும்புலிகள் தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை5

விடுதலைப் புலிகள் அமைப்பின் கரும்புலிகள் தினம் இன்றாகும்.

இதனையொட்டி புலிகளின் கட் டுப்பாட்டுப் பிரதேசங்களில் விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

இதேவேளை -

கரும்புலிகள் தினத்தையொட்டி யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளி லும் கரும்புலிகள் தின சுவரொட்டி கள் ஒட்டப்பட்டிருந்ததுடன் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

(ம-6)

## மாணவன் விடுவிக்கப்படும் வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும்

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை5

படையினரால் கைது செய்யப் பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ண சாமி திவ்வியன் விடுதலை செய்யப் படும் வரை எமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை யில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள ளதாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச அமைப்புகளின் கண்டனங்களின் பின்னரும்

# தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஸ்ரீலங்காப் படைகள் தொடர்கின்றன

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கடும் கண்டனங்களுக்குப் பின்னரும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் ஸ்ரீலங்கா அரச படைகள் தாராளமாக மேற்கொண்டு வருகின்றன.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்துத் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நாளை அழைப்பு விடுத்துள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்பேசும் மக்களுக்கெதிராகத் தனது இராணுவ இயந்திரத்தின் மூலம் பாரிய இன அழிவை மேற்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் போக்கைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை 10 தமிழ்க்கட்சிகள் சேர்ந்து அனுஷ்டிக்கும் ஹர்த்தாலுக்கு எமது யாழ்.பல்கலைக்கழக சமூகம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரச படைகளின் பாலியல் வல்லுறவுகள், துன்புறுத்தல்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. காரணமின்றிக் கைது செய்தல், சித்திரவதைக்கு உள்ளாக்குதல், காணாமற்போகச் செய்தல் என்பவற்றை ஸ்ரீலங்காவின் இராணுவ இயந்திரம் - சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கடும் கண்டனங்களுக்குப் பிறகும் - தாராளமாக மேற்கொண்டு வருகின்றமை எமது துரதிர்ஷ்டமே.

ஒருபுறம் சமாதானம் பற்றிப் பேசி உலகின் கண்களை ஏமாற்றிக் கொண்டு, மறுபுறம் மிகவும் திட்டமிட்ட ரீதியில் தமிழின அழிப்பை தற்போதைய சந்திரிகாவின் அரசு மேற்கொண்டு வருகின்றது. யாருமற்ற ஏதிலிகளாக எமது தமிழ்பேசும் மக்கள் அடக்குமுறைக் கொடுமைகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைப் பலிகொண்ட இந்த யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் மலரவேண்டும் என்பதே அனைத்துச் சாதாரண தமிழ்க் குடிமக்களதும் அவாவாகும்.

இந்தக் கொடிய யுத்தத்தின் அனைத்துக் கொடிய விளைவுகளுக்கும் முகம்கொடுத்து நிற்கும் எமது தமிழ்பேசும் மக்கள் வெறும் நடைப்பிணங்களாகவே தமது வாழ்வியல் நகர்வை மேற்கொண்டிருக்கின்றனர்.

தமிழின அழிப்பிற்கு உதவும் அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன பெரும்பான்மை இனத்தின் அரசியல் பலத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது எமது தமிழ் மக்களின் அரசியல் தலைமைக்கான வெற்றிடத்தைச் சுட்டி நிற்கின்றது.

இருந்த போதிலும் -

பத்துத் தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுத்தும் இந்த ஹர்த்தாலுக்கு எமது மாணவர்களின் பூரண ஆதரவினை நல்குவதன் மூலம் எமது ஒற்றுமையின் பலத்தை உயர்த்தி நிற்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**தமிழ்ப் பெண்கள் மீது படையினர் மற்றும் பொலீஸார் புரியும் பாலியல் வல்லுறவுகள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிராகப் பத்துத் தமிழ்க் கட்சிகள் இணைந்து நாளை வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதும் முழு அளவில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன.**

**அதனையொட்டி பல்வேறு அரசியல் தலைவர்களும் மனிதநேய அமைப்புகளும் வெளியிட்ட அறிக்கைகள் இப்பக்கத்தில் முழுமையாகப் பிரசுரமாகின்றன.**

# நாளை வீடுகளில் இருந்து பிரார்த்தனை செய்வோம்

## மனிதநேய அமைப்புகள் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை5

தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எமது கண்டனத்தை ஒருமித்த குரலில் தெரிவிப்பதற்காக நாளை வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் வீடுகளில் இருந்து பிரார்த்தனை செய்வோம்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் பத்துத் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நாளை நடத்தும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் பம்பலப்பிட்டியில் பொலீஸாரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட கந்தையா சிவரஞ்சினி, விமலாதேவி இராமச்சந்திரன் மற்றும் மருதானையில் மிலேச்சத்தனமாக நடத்தப்பட்ட மலையகத் தமிழ்ப்பெண் ஆகியோரது முறைப்பாடுகள் நாளை வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

1995ஆம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுக்குப் பின்னர் -

கைதடியில் செல்வி கிருஷாந்தி குமாரசாமி, குருநகரில் அலோசியஸ் மேரி சுகந்தினி, கோண்டாவிலில் செல்வி ரஜனி வேலாயுதம், பளையில் வாய்பேசாப் பெண், புங்குடுதீவில் சார்தாம்பாள், புலோலியில் மாணவி ஆகியோரும் -

மட்டக்களப்பு சம்மாந்துறையில் கோணேஸ்வரியும் மன்னாரில் ஜூடா கமலிட்டா, விஜிகலா நந்தகுமார், சிவமணி அர்ச்சுனன் ஆகியோரும்

பம்பலப்பிட்டியில் கந்தையா சிவரஞ்சினி, விமலாதேவி இராமச்சந்திரன் ஆகியோரும் -

மருதானையில் மலையகப் பெண் ஒருவரும் -

பொலீஸார் மற்றும் அரச படையினர் ஆகியோரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட தமிழ்ப் பெண்களில் சிலர். இவ்வாறான பல சம்பவங்கள் மேலும் இடம்பெற்றுள்ளன. அவர்களின் பெயர்ப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

செம்மணி, மிருசுவில் ஆகிய இடங்களில் புதைக்கப்பட்டது போன்று, வெளிச்சத்துக்கு வராத சம்பவங்கள் இன்னும் எத்தனையோ! சோதனைச் சாவடிகளின் திரைமறைவில் இழைகக்கப்படும் இம்சைகளும் எத்தனையோ!

யுத்தப் பிரதேசங்களில் மட்டுமன்றி, மலையகம், கொழும்பு ஆகிய பகுதிகளுக்கும் இந்த பாலியல் வெறியாட்டம் பரவியுள்ளது. இலங்கைத் தீவின் எந்தப் பகுதியிலும் தமிழ்ப் பெண்களின் மானத்திற்கு பாதுகாப்பு இல்லை என்னும் அளவுக்கு அந்த மிருகத்தனம் தொடர்கின்றது.

பலவித உள்ளூர் அமைப்புகளும், வெளிநாட்டு மனித உரிமை நிறுவனங்களும் இக்கொடூரச் செயல்களுக்கு எதிராக வெளிப்படுத்திய கண்டனங்களை அரசு உதாசீனம் செய்து வந்துள்ளது. அப்பயங்கரவாத மனித உரிமைமீறல்களுக்கு - எதிராக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அரசு எடுக்கத் தவறியுள்ளது.

எனவே வடக்கு - கிழக்கு, மலையகம், தென்பகுதி என்று பேதம் பாராது, எவ்விடத்தில் வாழ்ந்தாலும் எத்துறையைச் சேர்ந்தாலும், அனைத்துத் தமிழ்பேசும் மக்களும், ஒரு மனத்தவராய், ஒரே தினத்தில் எமது ஒருமித்த கண்டனத்தைத் தெரிவிப்போம். நாளை வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் வீடுகளிலிருந்து பிரார்த்தனை செய்யும் தினமாக அனுசரிப்போம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ம)

# பொலீஸ் அமைப்பையும் சட்டத்தையும் மீளாய்வு செய்யும் காலம் வந்துவிட்டது

## வரதராஜப்பெருமாள் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை5

இந்த நாட்டின் பொலீஸ் அமைப்பையும், பொலீஸ் சட்டங்களையும் மீளாய்வு செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள். பத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ள ஹர்த்தால் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு தமிழ்ப் பெண்ணை விசாரிக்கவென்று கூட்டிச்சென்ற மருதானைப் பொலீஸார் மூவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய கொடூரமானது நாகரிகம் பற்றிச் சிந்திப்பவர்களை அதிரவைத்திருக்கின்றது. வடக்கு - கிழக்கில் நடந்து கொண்டிருந்த இவ்வாறான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இப்போது கொழும்புக்கும் நீண்டிருக்கின்றன.

இந்த நாட்டில் இனமுரண்பாடு கூர்மையாக வளர்ந்ததற்கு பொலீஸ் மற்றும் இராணுவத்தின் கட்டாக்காலித்தனமான கொடூரங்களும் அதனைக் கடந்த அரசாங்கங்கள் கண்டு கொள்ளாமல் விட்டமையுமே பிரதான காரணங்களாகும். இதனை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்ட பொலீஸாரின் மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுப்பதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதையும் உத்தரவாதம் செய்தல் வேண்டும். காவல்காக்க வேண்டியவர்கள் கட்டுப்பாடற்றவர்களாக இருந்தால் நாடு சீரழியும். பிந்துனுவெவ படுகொலைகளும் மாவனல்ல சம்பவங்களும் பொலீஸார் மத்தியில் நிலவும் கட்டுப்பாடற்ற நிலைமைகளையே தெளிவுபடுத்துகின்றன.

இந்த நாட்டில் உள்ள பொலீஸ் அமைப்பு, பொலீஸ் நிலையங்கள், பொலீஸ் சட்டங்கள் மற்றும் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றி முழுமையாக மீளாய்வு செய்ய வேண்டும். அத்துடன் அவற்றை நவீன மாற்றங்களுக்கு உட்படுத்தவேண்டிய இறுதிக்கட்டத்தை இலங்கை அடைந்திருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. வல்லுறவுக்கு உட்படுத்தத் துணியும் அளவுக்கு கட்டுப்பாடற்ற பொலீஸாரிடம் ஆயுதங்கள் இருப்பது சமூக விரோதிகள் மற்றும் தேசவிரோதிகளிடம் ஆயுதங்கள் இருப்பதைவிட ஆபத்தானதாகும்.

பெண்கள் மட்டுமல்ல நல்லவர்களும் அப்பாவிகளும் கூட அச்சமின்றி இந்த நாட்டில் நடமாட முடியாத நிலைமை மேலும் வளர்ச்சியடைகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலீஸும் இச்செயல்களில் பங்காளிகளாகி விட்டால் இந்த நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது. இதனை அரசாங்கம் தெளிவாக உணர்ந்து இவ்விடயங்களில் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் உடனடியாகச் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். ஒரு சுதந்திர ஆணைக் குழுவை அமைப்பதால் மட்டும் பொலீஸ் தொடர்பான இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. மாறாக பொலீஸ் தொடர்பான அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்து உரிய மாற்றங்களைக் காலதாமதம் இன்றி மேற்கொள்ள வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ம)

# கண்டனங்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு 'செவிடன் காதில் ஊதிய சங்கு!'

## கத்தோலிக்க ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை5

தமிழ்ப் பெண்கள் மீதான வல்லுறவுகள், சித்திரவதைகள் என்பவற்றுக்கு எதிராக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்த கண்டனங்கள் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போன்று உள்ளது.

- இவ்வாறு யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. நாளை தமிழ்க்கட்சிகளின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து அந்த அமைப்பு இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச படையினர் மற்றும் காவற்துறையினரால் தமிழ்ப் பெண்கள் மீது தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் பாலியல் வல்லுறவு போன்ற வன்செயல்களுக்கு எதிராக யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

இச்சம்பவங்கள் இடம்பெறும் போது மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் நிறுவனங்கள் வெளிப்படுத்திய கண்டனங்கள், இலங்கை அரசைப் பொறுத்தவரையில் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போன்ற கவனிக்காமல் விடப்பட்டன. அரசின் இத்தகைய அலட்சியப் போக்கு மேற்கூறப்பட்ட கொடிய செயல்களில் ஈடுபட எத்தனிப்பவர்களுக்கு உற்சாகத்தையே கொடுக்கின்றது.

எமது பெண்களின் மானம் சிதைக்கப்படுவதை தடுக்கும் முகமாக, இலங்கையில் வாழும் சகல தமிழ்பேசும் மக்களும் ஒருமித்து எமது கண்டனத்தைத் தெரிவிப்போம்.

அண்மையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் மூவரின் முறைப்பாடுகள் நாளை வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதால் அத்தினம் முழுவதையும் வீட்டிலிருந்தவாறே செப, தப நாளாக அனுசரிக்கும்படி அனைவரையும் கோரி நிற்கிறோம் - என்றுள்ளது.

# தமிழ்ப் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அரசு தவறிவிட்டது

## மாவை சேனாதிராசா எம்.பி.குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை5

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான பாலியல்வல்லுறவுக் கலாசாரத்தைத் தடுத்து நிறுத்தவும் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு தவறிவிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

மலையகம், பசறை கோணக்கலைத் தோட்டத்தைச் சேர்ந்த 28 வயது குடும்பப் பெண் - இரு குழந்தைகளின் தாய் - கொழும்பு மருதானைச் சோதனைச்சாவடியில் காவற்துறையினரால் கடந்த 24 ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அநாகரிகமான - காட்டுமிராண்டித்தனமான - இப்படுபாதகச் செயல்கள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசில் - அவரே பாதுகாப்புப் படைகளின் தளபதியாக இருக்கின்ற காலகட்டத்தில் - அதுவும் கொழும்புத் தலைநகரில் - இடம்பெற்றுள்ளது.

இதற்கு முன்னர் அண்மையில் பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் இரு தமிழ்ப்பெண்கள் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட செய்திகள் வெளியாகியிருந்தன.

போர்ச் சூழலையும், அவசரகாலச் சட்ட விதிகளையும் தங்கள் கையில் எடுத்துக்கொண்டுள்ள இராணுவம் மற்றும் பொலீஸ் துறையிலுள்ள கொடியவர்கள் இந்த நாட்டில் தமிழ்க் குலத்திற்கு எதிராகப் பாலியல் வன்முறைக் கலாசாரத்தை தன்னிச்சையாக வளர்த்து விட்டனர்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி செம்மணியில் இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டார். அவரது குடும்பத்தைக் கொன்று செம்மணியில் புதைத்து விட்டனர். அவ்வாறே கோண்டாவிலில் ரஜனி, அம்பாறையில் சென்றல்காம்ப் கோணேஸ்வரி, புங்குடுதீவில் சாரதாம்பாள், மன்னாரில் கமலிட்டா மற்றும் மன்னார் உப்புக்குளத்தில் சிவமணி, விஜிகலா, மற்றும் நீர்கொழும்பில்.... பம்பலப்பிட்டியில்.... என்று பாலியல் சித்திரவதைகளின் பட்டியல் நீண்டு வருகின்றது.

அவசரகாலச் சட்டங்களையும், சட்டத்தின் ஓட்டைகளையும் பயன்படுத்தி இக்காமுகக் காவலர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் ஆசிரியர் சங்கமும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜூலை5

தமிழ்ப் பெண்கள் மீதான படையினரின் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை வடக்கு-கிழக்கில் நடத்தப்படவுள்ள ஹர்த்தாலுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவை வழங்கும்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் இவ்வாறு தெரிவித்தார்.

நாளை வெள்ளிக்கிழமை அதிபர்களும், ஆசிரியர்களும் பாடசாலைகளுக்குச் செல்லாது கடமையைப் பகிஷ்கரிப்பர். எனவே மாணவர்களை பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டாமென நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்ப் பெண்கள் மீதான அடக்குமுறைகளைக் கைவிட அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தக் ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே இதற்கு ஆதரவு வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு.

- இப்படி த. மகாசிவம் மேலும் தெரிவித்தார். (ம-7)

# ரஷ்ய விமானம் விழுந்து நொறுங்கியது; பயணம் செய்த 143 பேரும் உயிரிழப்பு!

## கறுப்புப்பெட்டி கண்டெடுக்கப்பட்டது: இயந்திரக்கோளாறு காரணமாம்

மொஸ்கோ,ஜூலை5

**10 பணியாளர்கள் உட்பட 143 பேருடன் பறந்து கொண்டிருந்த ரஷ்ய பயணிகள் விமானம் நேற்று முன்தினம் இரவு சைபீரியக் காட்டுப் பகுதியில் விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்திலிருந்த அனைவரும் உயரிழந்ததாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். சடலங்களை மீட்கும் பணிகள் நடைபெறுகின்றன. விமானத்தின் கறுப்புப்பெட்டி கண்டெடுக்கப்பட்டது.**

கிழக்கு ரஷ்ய நகரான யூரல் ஸிலிருந்து விளாடிவொஸ் ரொக்குக்கு 143 பேருடன் கடந்த செவ்வாய்க்கிழமை சென்றுகொண்டிருந்த 'விளாடி வொஸ்ரோகவியா' விமான நிறுவனத்தின் டபோலவ் - 154 ரக பயணிகள் விமானமே விபத்துக்குள்ளாகியது.



விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்கள் சிதறிக்கிடக்கும் காட்சி.

ரஷ்ய நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9.10 மணிக்கு விமான நிலைய 'றேடார்' திரையில் இருந்து விமானம் மறைந்ததாகக் கூறப்படுகிறது.

விமானம் இர் குடஸ்க் நகரின் விமான நிலையத்தில் வரிபொருள் நிரப்புவதற்காக தரை இறங்க இருந்ததாகவும் -

ஆனால் இரண்டு தடவைகள் தரை இறங்க முயற்சித்தும் முடியாமல் போனதாகவும் -

மூன்றாவது முறையாக தரையிறங்க முயற்சித்த போதே விமானம் தரையில் விழுந்து நொறுங்கியதாகவும் -

பேசுட்டரின் பேர்க் விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமானம் விழுந்த இடத்தில் பண்ணை வீடுகள் மற்றும் மர வீடுகள் இருந்த போதும், தரையில் இருந்த எவரும் உயிரிழக்கவில்லை.

விமானத்தின் எரிபொருள் விநியோகக் குழாய்ப் பாதையில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறின் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இர்குட்ஸ்க் நகரிலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய உதவிப் பிரதமர் இலியா கிலெபனோவ் தலைமையிலான விசாரணைக் குழு இந்த விபத்துக் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

(ஒ)

## கருணாநிதி கைது விவகாரம்: பொலீஸாரின் ஒளிநாடா குறித்து 'சன்' தொலைக்காட்சி சந்தேகம்

சென்னை,ஜூலை5

தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி கைது செய்யப்பட்ட சமயத்தில் படம் பிடிக்கப்பட்டதாகக் கூறி தமிழகப் பொலீஸார் வெளியிட்ட ஒளி நாடாகுறித்து 'சன் ரி.வி.' பலத்த சந்தேகம் எழுப்பியுள்ளது.

நேற்று முன்தினம் சென்னை பொலீஸ் ஆணையாளர் முத்துக்கருப்பன், செய்தியாளர் மாநாட்டில் 20 நிமிடக் காட்சிகள் உள்ள ஒளி நாடாவை வெளியிட்டார்.

கருணாநிதி கைது தொடர்பாக 'சன் ரி.வி.'யில் காட்டப்பட்ட காட்சிகளை விட மேலதிகமாக பல காட்சிகள் அதில் இருந்தன.

முரசொலிமாறன் பொலீஸ் அதிகாரிகளுடன் இழுபறிப்படும் காட்சிகள் சில அந்த ஒளிநாடாவில் படம் பிடிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒளி நாடா குறித்து, பின்வரும் கேள்விகளை 'சன் ரி.வி.' தனது ஒளிபரப்பில் வெளியிட்டுள்ளது.

- கருணாநிதி கைது செய்யப்பட்டதை 'சன்.ரி.வி.'யினர் மட்டுமே படம் பிடித்து ஒளிபரப்பியதாகப் பொலீஸார் பிரசாரம் செய்தது ஏன்?
- கைது இடம்பெற்ற 40 மணித்தியாலங்களின் பின்னர் இந்த ஒளி நாடா வெளியிடப்பட்டது ஏன்?
- கருணாநிதியைக் கைது செய்ய 4 மணி நேரமானது என்று கூறும் பொலீஸார் வெறும் 20 நிமிடக் காட்சிகளை மட்டும் வெளியிட்டிருப்பது ஏன்?
- கைது தொடர்பாக விசாரணை நடத்திய, மத்திய உள்துறை அமைச்சகம், மத்திய அரசு, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குழு ஆகியவற்றிடம் இந்த ஒளி நாடாவை காண்பிக்காதது ஏன்?

இவ்வாறு 'சன் ரி.வி.' கேள்வி எழுப்பியுள்ளது.

(ஒ)

## பாரபட்சத்தை கண்டித்து பயணம்

தெஹ்ரான்,ஜூலை5

உலகில் மிக உயரமானவரும், மிகக் குட்டையானவரும் இணைந்து, சகலவித பாரபட்சங்களையும் கண்டனம் செய்யும் வகையில் உலகளாவிய சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

உலக அரங்கில்

அசாம்கான் மகுத் என்ற 8அடி 2அங்குல உயரமுடையவரும், பாகிஸ்தானில் மிகக் குள்ளமானவர் என்று கருதப்படும் அலிகாரத் என்ற 3அடி 9அங்குல உயரமானவரும் சேர்ந்து ஈரானில் இருந்து பாகிஸ்தானை நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

(ஒ)

## அங்கங்கள் செயலிழக்கும் அளவுக்கு சிறுமி மீது பாலியல் சித்திரவதை; இளைஞருக்கு 120 வருடச் சிறை! அமெரிக்காவில் சம்பவம்

சிக்காகோ,ஜூலை5

9 வயதுச் சிறுமியை பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி, அவளது அங்கங்களை செயலிழக்கச் செய்த பெட்ரிக் பைஸ் என்ற இளைஞருக்கு அமெரிக்க நீதிமன்றம் 120 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

தற்போது 13 வயதாகும் பாதிக்கப்பட்ட சிறுமி, கைகள், கால்கள் செயலிழந்ததாலும் பேசும், பார்க்கும் சக்திகளை இழந்ததாலும் தலையை ஆட்டி, புருவங்களை அசைத்து நீதிமன்றத்தில் பதிலளித்தார்.

தற்போது 29 வயதாகும் பெடரிக் பைஸ், 1997ஆம் ஆண்டு, சம்பவதினத்தில் தான் குடியிருந்த அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் வசித்த சிறுமியை வாழைப்பழம் ஒன்றைக் கொடுத்து தனது வீட்டிற்குள் அழைத்துச் சென்றதாகவும் -

அங்கு சிறுமியைக் கொடூரமான பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கிய பைஸ் இறுதியில் அந்தச் சிறுமியின் கழுத்தை நெரித்து தொண்டைக்குள் பூச்சி மருந்தை ஊற்றியதாகவும் -

பின்னர் சிறுமி இறந்து விட்டதாக நினைத்து வீட்டிற்கு வெளியே இழுத்துப் போட்டுவிட்டதாகவும் -

விசாரணைகளில் தெரியவந்தது.

இதையடுத்து, பாலியல் சித்திரவதை, கொலை முயற்சி, ஆள் கடத்தல் ஆகிய குற்றங்களுக்காக மிகக் கடுமையாகத் தண்டிக்க விரும்புவதாகக் கூறிய நீதிபதி, பெட்ரிக் பைஸுக்கு 120 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார்.

(ஒ)

## நேபாளத் தலைநகரில் தொடர் குண்டுவெடிப்பு

காத்மண்டு,ஜூலை5

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் தலைமை நீதிபதி கேசவ் பிரசாத் உபாத்யாயவின் இல்லத்துக்கு அருகே நேற்றுக் காலை குண்டு ஒன்று வெடித்தது. அதனையடுத்து நகரின் பிரதான இடங்களில் மேலும் இரண்டு குண்டுவெடிப்புகள் நடந்தன.

நேபாளப் பிரதமர் கிரிதர் பிரசாத் கொய்ராலாவின் அதிகாரபூர்வ இல்லம் வெடிகுண்டு வெடித்த இடத்துக்கு மிகச் சமீபமாகவே உள்ளது.

தலைமை நீதிபதியின் வீட்டின் வாசலுக்கு அருகே உள்ள பெரிய மரம் ஒன்றின் கீழ் வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் இடம்பெற்ற மன்னர் குடும்பப் படுகொலைகள் குறித்து விசாரணை நடத்திய உயர் நிலைக் குழுவுக்கு தலைமை நீதிபதி உபாதயாய தலைவராக இருந்தார்.

இந்தக் குண்டுவெடிப்புக்கு யாரும பொறுப்பேற்கவில்லை. இது மாவோயிஸத் தீவிரவாதிகளின் செயலாக இருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகப்படுகின்றனர்.

மன்னர் குடும்பப் படுகொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கையை மாவோயிஸத் தீவிரவாதிகள் நிராகரித்திருந்தனர்.

இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்த சில மணி நேரத்தில் காத்மண்டுவின் பிரதான சந்தையான 'பஹாகு' சந்தையில் குண்டுவெடித்ததில் இந்தியர் ஒருவருக்கு சொந்தமான கடை ஒன்று சேதமானது.

நேபாளத்தில் மதிப்புமிக்க 5 நட்சத்திர ஹோட்டலான 'சோயல்டி'க்கு அருகிலும் மற்றொரு குண்டுவெடித்தது.

(ஒ)

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிஜீ பணிப்பாளர் படுகொலை

சுவா,ஜூலை5

பிஜியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிப்பாளர் ஜோனஸ் கொட் நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலீஸ் அதிகாரி ஒருவர் தேடப்பட்டு வருகிறார்.

கடந்த மே மாதம் இந்திய வம்சாவளிப் பிரதமர் மகேந்திர சௌத்திரியும், அவரது அமைச்சரவைச் சகாக்களும் பழங்குடிக் கிளர்ச்சியாளர்களால் பதவி கவிழ்க்கப்பட்டு, நாடாளுமன்றக் கட்டடத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். அந்தச் சமயத்தில் அவர்களின் விடுதலை தொடர்பாக முக்கிய பங்காற்றியவர் ஜோன்ஸ் கொட்.

ஆகவே அரசியல் விவகாரம் காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஆனால் இந்தக் கொலையின் அரசியல் நோக்கம் எதுவும் இருக்கவில்லை என்றும் பிஜி பொலீஸாரும் அரசு சட்டத்தரணியும் கூறியுள்ளனர்.

(ஒ-9)

## கொலம்பிய சிறையில் கலவரம்; 16 தீவிரவாதக் கைதிகள் பலி!

பொகோடா,ஜூலை5

கொலம்பியாவின் பிரதான சிறைச்சாலைகளில் ஒன்றான லாமோடெபோ சிறையில் அடைக்கப்பட்டிருந்த தீவிரவாதிகளிடையே மூண்ட சண்டையில் 16 கைதிகள் கொல்லப்பட்டனர்.

சிறைக்கைதிகளின் சிநேகிதிகளும், உறவினர்களும் அவர்களைப் பார்க்க அனுமதிக்கப்பட்ட சமயத்தில், சிறைக்கைதிகளிடையே கைகலப்பு ஏற்பட்டது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த இடதுசாரித் தீவிரவாதிகளுக்கும், வலதுசாரி 'பார்க்' படையினருக்கும் இடையே ஏற்பட்ட இந்தக் கலவரத்தில் 16 கைதிகள் கொல்லப்பட்டனர்.

'பார்க்' தீவிரவாதிகள் சிறையை உடைத்துத் தப்ப முயற்சித்ததாகவும் -

அந்தச் சமயத்தில், இடதுசாரி தீவிரவாதிகளுடன் அவர்கள் மோதியதாகவும் -

கலகம் அடக்கும் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டதையடுத்து - 16 பேர் இறந்த பின்னர் - நிலைமை கட்டுக்குள் அடக்கப்பட்டதாகவும் -

சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொலம்பிய சிறைகளில் இடதுசாரித் தீவிரவாதிகளுக்கும், வலதுசாரி 'பார்க்' தீவிரவாதிகளுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்படுவது சகஜமாகிவிட்டது.

ஒரு வாரத்துக்கு முன்னர் 19 தீவிரவாதிகள் உட்பட சுமார் 100 பேர் மிகோடா சிறைச்சாலைச் சுவரை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து அதன் வழியே தப்பிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

கொலம்பியாவில் சோஷலிஸச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தக் கோரி 37 ஆண்டுகளாக வலதுசாரி 'பார்க்' தீவிரவாதிகள் போராடி வருகிறார்கள். சுமார் 40 ஆயிரம் பொதுமக்களை இவர்கள் இதுவரை கொன்றிருப்பதாகக் கொலம்பிய அரசு கூறுகிறது.

கொலம்பியாவில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை விட அதிக பகுதிகள் தீவிரவாத இயக்கங்கள் மற்றும் போதைப் பொருள்கள் கடத்தல் குழுக்கள் போன்றவற்றின் பிடியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## அகதி அந்தஸ்துக் கோரி ஆஸ்திரேலியாவுக்குள் படகு மூலம் நுழைபவர்கள் எண்ணிக்கை குறைவு

சிட்னி,ஜூலை5

சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் படகுகள் மூலம் நுழைபவர்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டுகளை விடத் தற்போது குறைந்துள்ளதாக ஆஸ்திரேலிய அரசு தெரிவித்துள்ளது.

அகதி அந்தஸ்துக் கோருபவர்கள் தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு கடைப்பிடித்து வரும் கடுமையான போக்குக் காரணமாகவே, படகுகள் மூலம் தமது நாட்டுக்குள் நுழையும் சட்ட விரோதக் குடியேறிகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதாக ஆஸ்திரேலிய குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு கடந்த மாதம் விஜயம் செய்த ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஃபிலிப் ரொட்ரக், படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்களை தடுப்பது குறித்து அந்த நாடுகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-9)

## திருமறைக் கலாமன்ற பயிலரங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். திருமறைக்கலாமன்றத்தினர் ஒரு வருட பயிற்சிக் காலத்தைக் கொண்ட ''பாரம்பரிய கலைகள்'' பயிலரங்கப் பயிற்சிகளை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த பயிலரங்கத்தில் நாட்டுக்கூத்து, இசை நாடகம், கிராமிய கலைகள் தொடர்பான பயிற்சிகளும், விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். திருமறைக்கலாமன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு திருமறைக் கலாமன்ற பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க-6)

## பாலர் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

கோண்டாவில் விக்கிலேஸ்வரா பாலர் பாடசாலையின் ஒன்பதாவது வருடாந்த விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் இந்துமகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சென். ஜோண்ஸ் அம்புலன்ஸின் மாவட்ட ஆணையாளர் கே. அருந்தவராஜா இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்,

பாடசாலைப் பொறுப்பாசிரியர் திருமதி சிவானந்தராணி சிறீதரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவானந்தி மன்மதராஜன் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-7)

## கறுப்பு ஜூலையில் புலிகளின் தாக்குதல் பீதி
# கொழும்பில் படையினர் உஷார்; சோதனை நடவடிக்கை தீவிரம்

கொழும்பு, ஜூலை 5

கறுப்பு ஜூலையை ஒட்டி தலைநகர் கொழும்பு, அதி உயர் பாதுகாப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதிப் பொலீஸ மா அதிபர் ரத்னவீரஇக்னேஷியஸ் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலையை ஒட்டி இம்மாதத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற பீதி காரணமாக தலைநகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் —

இந்தப் பாதுகாப்புப் பணிக்காக ஏனைய இடங்களில் இருந்து மேலதிகப் பொலீஸார் நகரில் குவிக்கப்பட்டுள்ளதாகவும் — அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை —

விடுதலைப் புலிகளின் கரும்புலித் தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு தலைநகரில் கடந்த சில தினங்களாகவே பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். நகரின் கேந்திர நிலையங்களில் படையினர் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

முக்கிய வீதிகளில் வழமையைவிட ரோந்து நடவடிக்கைகளும், சோதனைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. சந்தேகத்திற்கு இடமானவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, உடற்பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தேடுதல், சுற்றிவளைப்புகள் நடைபெற்று வருவதுடன், சந்தேகத்திற்குரியவர்கள் பொலீஸ் நிலையங்களுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (க-3)

## கோப்பாய், பலாலி ஆகிய
# 2 ஆசிரிய கலாசாலைகளுக்கும் விரிவுரையாளர்கள் நியமனம்

அச்சுவேலி, ஜூலை 5

கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளின் விரிவுரையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தொழில்சார் கல்வி ஆரம்பக் கல்வி, சமூகக் கல்வி, உடற்கல்வி, மனையியல், சித்திரம், தமிழ், ஆகிய பாடத்துறைகளுக்கும். —

பலாலி ஆசிரிய கலாசாலையில் தொழில்சார் கல்வி, கணிதம், விவசாயம், வர்த்தகம், உடற்கல்வி, விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடத்துறைகளுக்கும் விரிவுரையாளர்கள் தற்காலிக இணைப்பு மூலம் நிரப்பப்படவுள்ளனர்.

விரிவுரையாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெற்றன.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு ஒன்பது விரிவுரையாளர்களும், பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு ஒன்பது விரிவுரையாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர். (க-11)

## கொழும்பில் புளுக்கொடியலுக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் ஒடியல் மற்றும் புளுக்கொடியலுக்கு கொழும்பில் அதிகளவு கிராக்கி நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ 35 ரூபா தொடக்கம் 40 ரூபா விற்கப்படும் புளுக்கொடியல், கொழும்பில் 120 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

## யு. என். எச். சி. ஆர். திட்டத்தின் கீழ்
# யாழ். மாவட்டத்தில் மேலும் 8 அபிவிருத்தித் திட்டங்கள்
## 23 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ். மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் மேலும் 8 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென 23 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த ஆண்டில் 15 வேலைத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அவை தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது வரையும் அனுமதி வழகங்ப்பட்ட 23 வேலைத் திட்டங்களுக்கும் மொத்தமாக 8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தற்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ள 8 வேலைத் திட்டங்களின் விவரம் வருமாறு:-

★ சங்கானைப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான சுழற்சி முறைக்கடன் திட்டம் — 2 லட்சம் ரூபா.

★ உரும்பிராய் வடக்கில் கால்நடை வளர்ப்பு சுயதொழில் முயற்சிக்கான சுழற்சி முறைக்கடன் திட்டம் — 3 லட்சம் ரூபா.

★ நலன்புரிநிலையங்களின் குழுத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறிக்கு — ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா.

★ நலன்புரிநிலையங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கான வியாபார முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கு — 2 லட்சம் ரூபா.

★ உடுவில் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில்வசிக்கும் மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான சுழற்சி முறைக் கடன் திட்டம் — 5 லட்சம் ரூபா.

★ இடம்பெயர்ந்து துன்னாலை வடக்கில் வாழும் மக்களுக்கு கலாசார மண்டபம் அமைப்பதற்கு — 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

★ இடம்பெயர்ந்து வல்வெட்டித்துறைப் பகுதியில் வாழும் நலிவுற்ற மக்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான சுழற்சி முறைக்கடன் திட்டம் — 4 லட்சம் ரூபா.

★ இடம்பெயர்ந்து துன்னாலை தெற்கில் வாழும் மக்களுக்கு கலாசார மண்டபம் அமைப்பதற்கு — 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா. (க-10)

# யாழ். நகரில் சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 5

ஏசியன் ஜூனியர் சதுரங்கச் சாம்பியன் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட மட்டத் தெரிவு ஆட்டங்கள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக இந்தப் போட்டிகளை நடத்துவதற்காக இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தின் தலைவர் டெரிக் பெரேரா, செயலாளர் எஸ். பி. கமகே உட்பட நால்வர் கொண்ட குழு இன்று வியாழக்கிழமை இங்கு வரவிருக்கின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 10, 12, 14, 16, 18, 20 வயதுக்குட்பட்டோர் பிரிவுகளில் ஆண்கள், பெண்கள் தனித்தனியாகப் பங்குபற்றும் ஆட்டங்கள் இடம்பெறவிருக்கின்றன.

கொழும்பில் இருந்துவரும் குழுவினர் யாழ். மாவட்ட அணிகளுடன் சிநேகபூர்வ ஆட்டங்களில் பங்குபற்றுவதுடன் சதுரங்கம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றையும் நடத்தவிருக்கின்றனர்.

இந்தப் போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். சதுரங்கச் சம்மேளனமும், இலங்கைச் சதுரங்க சம்மேளனமும் இணைந்து செய்து வருகின்றன.

போட்டியில் கலந்து கொள்வதற்கு, இதுவரை விண்ணப்பம் செய்யாதவர்கள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3-10)

## 3 மட்டு. மீனவர் ஹொங்கொங்கில் கரை ஒதுங்கினர்

மட்டக்களப்பு, ஜூலை 5

மட்டக்களப்பு கல்குடாக் கடலில் கடந்த 23 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்றபோது காணாமற்போன மீனவர்கள் மூவர் ஹொங்கொங்கில் இருப்பதாகப் பொலீஸார் அவர்களது உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இயந்திரப்படகு ஒன்றில் மீன்பிடிக்கச்சென்ற படகின் உரிமையாளரான கும்புறுமுனையைச் சேர்ந்த துரைராசா (வயது 48), கண்ணகிபுரத்தைச் சேர்ந்த சாந்தன் (வயது 47), கல்மடுவைச் சேர்ந்த கபிரியேல் பாஸ்கரன் (வயது 26) ஆகிய மூவருமே காணாமற் போயிருந்தவர்களாவர்.

இவர்களின் படகு இயந்திரம் பழுதானதை அடுத்து காற்றில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. சில தினங்களின் பின்னர் இவர்கள் மூவரும் ஹொங்கொங் கடற்கரையில் மயங்கிய நிலையில் கரை ஒதுங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 5

அகவொளி நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பாங்சால் வீதியில் உள்ள மேற்படி நிலையத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் 'சமகால யாழ்ப்பாணத்து இளைய தலைமுறை' எனும் பொருளில் டாக்டர் சா. சிவயோகன் கருத்துரை வழங்குவார். (க-19)

## கொழும்பில் நித்தியானந்தா நினைவு நிகழ்வு

பனை அபிவிருத்திச்சபையின் ஆரம்பத் தலைவரும் சிறந்த தொழிற்சங்கவாதியுமான அமரர் கே. சி. நித்தியானந்தாவின் நினைவுதின நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பம்பலப்பிட்டியிலுள்ள இந்து கலாசாரத்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் தொழிற்சங்கவாதிகள், தலைவர்கள் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புப் பேருரைகளை ஆற்றவுள்ளனர்.

அமரர் கே. சி. நித்தியானந்தாவின் நினைவாக நூலொன்றும் வெளியிடப்படவுள்ளது.

1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபையின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்ட கே. சி. நித்தியானந்தா சிறந்த தொழிற்சங்கவாதியாகவும், பொதுச் சேவையாளனாகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

## கூட்டம்

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் தலைவர் வி. குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (க-10)

## பரிசளிப்பு விழா

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி பொ. சி. வரதராசா கலந்து கொள்வார். (க-28)

## அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்டன

தென்மராட்சி, ஜூலை 5

தென்மராட்சி கல்வி வலயத்தின் வரணி ஆசிரிய பயிற்சி நிலையம் மற்றும் பளை மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கான அலுவலகங்களுக்குத் தேவையான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், புகைப்படப் பிரதி பண்ணும் இயந்திரங்கள் உட்படப் பல அலுவலக உபகரணங்கள் மாகாணக் கல்வி அலுவலகத்தினால் வலயக் கல்வி அலுவலகத்திற்குவழங்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான பாடப் பயிற்சி உபகரணங்களும் வந்து சேர்ந்துள்ளன. (ம-117)

## புதிய நடைமுறைகளைத் தொடர்ந்து
# கசூரினா பீச்சுக்கு வருவோரின் எண்ணிக்கை பெரும் வீழ்ச்சி

காரைநகர், ஜூலை 5

காரைநகர் கசூரினாப் பீச்சிற்கு வருவோருக்கு, கடற்படையினர் அனுமதி வழங்குவதற்கு கடும் நடைமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர். இதனால் கசூரினா பீச்சிற்கு வருவோரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

கசூரினா பீச்சிற்கு வருவோர் தமது பகுதி இராணுவப் பொறுப்பதிகாரியிடம் இருந்து சிபார்சுக் கடிதம் பெற்றுவந்தால் மட்டுமே கசூரினாப் பீச்சிற்குச் செல்ல அனுமதிக்கின்றனர். இதனால் வார இறுதி நாள்களில் ஆயிரக்கணக்கில் வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது குறைவடைந்துள்ளது.

இதேபோன்று, காரைநகருக்கு ஆலய உற்சவங்கள் மற்றும்உறவினர்களின் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்காக வருகை தருவோர் இரவு வேளைகளில் அங்கு தங்கி நிற்க வேண்டுமெனின் தமதுபகுதி இராணுவப் பொறுப்பதிகாரியின் சிபார்சுக் கடிதம் பெற்று வரவேண்டும் எனக் கடற்படையினர் அறிவித்துள்ளனர். (ம-73)

உதயன்

## கபடத் திட்டம்

தென்னிலங்கையில் அரசியல் பிரச்சினைகள், நெருக்கடிகள் உருவாகும் போது, இனப்பிரச்சினையைக் காட்டி, சிறுபான்மைத் தமிழரின் தலையில் அப்பிரச்சினையை உருட்டிவிடும் போக்கு தெற்கு அரசியலில் காலம் காலமாக இருந்து வருவதை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி விட்டோம். இப்போதும் மீண்டும் அதுதான் அரங்கேறத் தொடங்கியிருக்கின்றது.

தென்னிலங்கையின் அரசியல் இழுபறியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை அமைச்சரவையிலிருந்து தூக்கிவீசினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதன் பலனாக நம்பிக்கையில்லாப் பிரேரணை, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முடியாத இக்கட்டு என்று பல நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தலைவரான ஜனாதிபதி குமாரதுங்க.

சிங்களத் தலைவர்கள் ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு அல்லது கைப்பற்றிய ஆட்சிப்பீடத்தை தக்கவைப்பதற்கு சிறுபான்மையினரின் தலையில் மிளகாய் அரைப்பது போன்ற வழமையான வேலையை இப்போதைய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி குமாரதுங்கவும் நாட ஆரம்பித்திருக்கின்றார்.

நாட்டில் இனப்பிரச்சினை முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. சிங்களத் தேசியம் ஒரு புறமும் தமிழ்த் தேசியம் ஒரு புறமுமாக கச்சை கட்டிக் கொண்டு எதிரும் புறமுமாக மோதிக்கொண்டிருக்கின்றன.

சிங்களக் கட்சிகளான பொது மக்கள் ஐக்கிய முன்னணி அணியும், ஐக்கிய தேசிய கட்சியும் ஆட்சிக் கட்டில் ஏறுவதற்கு அல்லது கைப்பற்றிய ஆட்சிக்கட்டைத் தக்கவைப்பதற்கு தங்களுக்குள் போராட்டம் நடத்தும்போது -

அந்தப் போராட்டத்தை ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புபடுத்தி பிரசாரம் செய்து - தவறாக விளையாடி - 'அளாப்பி' - அதன் மூலம் வெல்ல முயல்கின்றது அரசுத் தரப்பு.

ஏதோ தனது அரசு மட்டும்தான் சிங்களத் தேசியத்தின் குரல் என்பது போலவும் -

எதிரணியில் இருக்கும் ஐ.தே. கட்சி புலிகளின் கூட்டணியைச் சேர்ந்தது என்பது போலவும் -

புதிய படத்தைக் காட்ட முயல்கின்றது அரசுத்தரப்பு.

அத்தோடு முன்னர் எப்போதுமில்லாத பெரும் யுத்த நெருக்கடியை அரசு எதிர்கொண்டிருப்பது போல ஒரு மாயையைக் காட்டி, இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிகள் பொறுப்பின்றி நடந்து, அரசைக் கவிழ்த்து, அதன் மூலம் புலிகளுக்கு உதவி, நாட்டைக் குட்டிச்சுவராக்கப் போகின்றன என்ற எண்ணத்தை தெற்கு மக்கள் மத்தியில் விதைப்பதிலும் அரசு முனைப்பாக இருக்கிறது.

இத்தகைய பதிலடி நடவடிக்கை மூலம் அரசைக் கவிழ்க்கும் நெருக்குதல் முயற்சியை முறியடிக்கலாம் என்பது சந்திரிகா தரப்பின் கணிப்பு.

இந்தத் திட்டத்தின் வெளிப்பாடு தான் -

பல முனைகளிலும் பெரும் தாக்குதல்களுக்குப் புலிகள் தயாராகின்றனர் என்றும், அதை முறியடிப்பதற்காகப் படையினர் புலிகளின் நிலைகள் மீது விமானக் குண்டு வீச்சுக்களை ஆரம்பித்துள்ளனர் என்றும் விடுக்கப்படும் அறிவிப்புகளாகும்.

அரசின் இந்தக் கபடத் திட்டத்தை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கடந்த திங்களன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இந்தக் குண்டுவீச்சுக் குறித்து அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கவலையும், கண்டனமும் தெரிவித்திருப்பது, இந்த கபடத் திட்டம் அந்த நாடுகளுக்கும் புரிய ஆரம்பித்துவிட்டது என்பதைத்தான் காட்டுகின்றது.

# அரச ஊழியரின் அசிரத்தையால் நிவாரணம் பெறுவதில் சிரமங்கள்

## இடம்பெயர்ந்த மக்கள் அலைக்கழிவு

கோண்டாவில்,ஜூலை5

அரச உத்தியோகத்தர்களின் அசிரத்தையினால் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் நிவாரணம் பெறுவதற்கு அலைந்து திரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரியாலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து கடந்த ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் கடந்த ஜனவரி மாதம் முதல் மீளக்குடியேறத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் எங்கு தங்கியிருந்தாலும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளிலேயே நிவாரணப் பொருள்கள்களைப் பெற வேண்டும் என்று பணிக்கப்பட்டது. அதை அடுதது இடம்பெயர்ந்த மக்கள் பல மைல்கள், பல நாள்கள் அலைந்து திரிந்தே தமது நிவாரணத்தைப் பெற்று வந்துள்ளனர்.

எனினும் அரியாலைப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து இருந்த இடங்களிலேயே நிவாரணம் பெற அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறியுள்ள போதிலும் நிவாரணப் பொருள்களை அவர்கள் முன்பிருந்த இடங்களிலேயே பெற வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் நிவாரணம் பெற அலைந்து திரிகின்றார்கள்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து மீளக்குடியேற அனுமதிக்கப்படாது வேறு இடங்களில் தங்கியுள்ளவர்களும் யாழ்.பிரதேச செயலாளர் பிரிவிலேயே நிவாரணம் பெற வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களும் சிரமப்படுகின்றார்கள்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வசதிகளே முதன்மைப்படுத்தப்படுவதால் தான் இடம் பெயர்ந்த மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றார்கள் என்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது.

(க-ம-86)

## நாட்டு நடப்பு

ரியூட்டறி - VII

பட்டினத்தில் குத்தெழும்பப் பேத்தி
பதை பதைத்து ஆஸ்பத்திரி நண்ணி
டியூசன் கொட்டிலுக் கோடிச் சென்று
குறித்துவா புதிய பெயர்கள் என்றாள்
"டிக்சி, டிலானி, டுக்சி, டுலானி,
டக்சி, டயானா, டிம்பிள், டினோ,
டிக்சன், டுலான், டுக்சன், டைசன்,
டிலான், டிக்கோ, பெக்கி, பெக்கொ"
இத்தனை இனிய பெயரும்
இங்குள்ள சைவர் பேராம்!

*- விகடகவி -*

# விடுதலைப் போராட்டம் மீது பற்றிருந்தால் பொய்ப் பிரசாரங்களை நிறுத்திவிடுங்கள்!

## தமிழ்ச்செல்வன் ரி.பி.ஸிக்கு விசனம் தெரிவித்துக் கடிதம்

வவுனியா,ஜூலை5

தமிழீழ விடுதலைப் போராட்டம் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் (ரி.பி.ஸி.), 'வான்முரசு' பத்திரிகைக்கும் உண்மையான பற்றும் மதிப்பும் இருந்தால், உண்மைக்கு மாறான பொய்ப் பிரசாரம் நடத்துவதை உடன் நிறுத்திக்கொள்ளவும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

இது விடயமாக அவர் 'வான்முரசு' பத்திரிகையின் ஆசிரியர் பூ.சீவகனுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பப்படும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் பத்திரிகையான 'வான்முரசு' ஆகியனவற்றில் வெளியாகும் நிகழ்ச்சிகள், ஆய்வுகள், அலசல்கள், கட்டுரைகள் ஆகியன தொடர்பாக விசனம் தெரிவித்து கடிதத்தை தமிழ்ச்செல்வன் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் அந்தப் போராட்டத்தை முன்வைத்து வரும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் ஆதரவு போன்றதொரு மாயையை உருவாக்கியவாறு நாசூக்கான முறையில் தங்கள் வானொலியும் 'வான்முரசு' பத்திரிகையும் நடத்திவரும் விசமத்தனமான பிரசாரத்தை நாம் நன்கறிவோம்.

அதேவேளை சமீப காலமாக சுவிஸ் நாட்டுப் பணியகத்தைச் சேர்ந்த எமது பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் மீது தாங்கள் கட்டவிழ்த்துவிடும் பொய்யான, தீங்கான, கீழ்த்தரமான பரப்புரைகளையும் நாம் நன்கறிவோம், தங்களது வானொலி நிர்வாகிகளுக்கும், வன்னியிலுள்ள புலிகளின் தலைமைக்கும் மத்தியில் உறவும், தொடர்பும் இருப்பதாக ஒரு பொய்யான தகவலை வெளியிட்டவாறு, தமது சுவிஸ் பணியகப் பொறுப்பாளர்களைக் கொச்சைப்படுத்தி, சுவிஸ் நாட்டில் வாழும் தேசப்பற்றுடைய மக்களையும் குழப்பி வருகின்றீர்கள்.

அத்தோடு தங்களது பத்திரிகை சுவிஸ் நாட்டிலுள்ள தமிழ் வர்த்தக நிறுவனங்களில் இருந்து பறித்துச் செல்லப்பட்டதாக தாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டை விசாரித்துப் பார்த்ததில், தங்களது குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை.

தங்களது பத்திரிகை விடுதலைப் போராட்டத்துக்கு விரோதமான கருத்துக்களை தாங்கி வந்ததால் விடுதலைப் பற்றுள்ள வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் பத்திரிகை விற்பனையை நிறுத்தியுள்ளதாகவும், சிலர் பத்திரிகையை அப்புறப்படுத்தியதாகவும் நாம் அறிந்துள்ளோம்.

இந்நிகழ்வுகளுக்கும் தமக்கும் சம்பந்தமில்லையென எமது பிரதிநிதிகள் நிலைமையை தெளிவுபடுத்தியுள்ளதால் தாங்கள் இப்பிரச்சினையை பூதாகாரமாக்கி எமது கிளை அமைப்புக்கு அவதூறு ஏற்படுத்த முனைகின்றீர்கள்.

தமிழீழத் தேசிய விடுதலையுடன், விடுதலைப் புலிகள் இயக்கம் மீதும் தங்களது வானொலிக்கும், 'வான் முரசு' பத்திரிகைக்கும் உண்மையான பற்றும் மதிப்பும் இருந்தால் இனியாவது இத்தகைய உண்மைக்கு மாறாகப் பொய்ப் பிரசாரம் நடத்துவதை நிறுத்திக் கொள்ளுமாறு அன்புடனும் பண்புடனும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விடயம் குறித்து சுவிஸ் பணியகப் பொறுப்பாளர்கள் பொறுமையுடனும், பெருந்தன்மையுடனும் நடந்துகொண்டதையிட்டு இயக்கத் தலைமை அவர்களைப் பாராட்டியுள்ளது - இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3-9)

## சாயிசிந்தனை

### அன்பை விட விலை உயர்ந்தது எதுவுமில்லை

உருவங்கள் மாறியிருக்கலாம்! பெயர்கள் வெவ்வேறாக இருக்கலாம்! பேசும் மொழி கூட வேறாக இருக்கலாம்! ஆனால் இவை அனைத்தையும் தூண்டி இயக்குவது இறைவன் மட்டுமே என அறிந்து கொள்ளுங்கள்.

எல்லாம் இறைவனின் அம்சங்கள்தான் என்பதும் உணரப்பட வேண்டும்! இறைவனே அறிவித்திருக்கின்றார், எல்லாம் அவரது தெய்வீக வடிவங்களே என்று. ஆனால் இறைவன் பிரேமை ஸ்வரூபம். அன்புதான் அவரது தத்துவம். அந்த அன்பே இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கிறது. எல்லோரிடமும் உறைவது அந்தத் தெய்வீக அன்பு மட்டுமே!

இறைவன் எப்படித் தன் அன்பை அனைவரிடமும் வெளிப்படுத்துகின்றாரோ, அப்படியே ஒவ்வொரு மனிதனும் தன் அன்பை மற்றவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்! அன்பை இப்படித்தான் என்று வரையறுத்துக் கூற முடியாது!

மனிதனுடைய பரந்த அறிவாலோ, பணத்தாலோ அன்றி வேறெதாலோ அன்பை அளவிட்டுக் கூற முடியாது. பிரகாசமாக விளங்கும் சூரியனை அதன் பிரகாசத்தாலேயே தான் காணமுடியும்!

அதே போல அன்பின் முழுமையான வடிவமான இறைவனையும், அதே அன்பின் மூலமாகத்தான் உணர்ந்து கொள்ளமுடியும். இந்த அன்பை விட விலையுயர்ந்தது உலகில் வேறெதுவும் கிடையாது.

*(சனாதன சாரதி மார்ச் 1995)*

# மந்திகை ஆஸ்பத்திரி சிறுவர் வார்ட்டில் ஒரு மாதத்தில் 215 பேருக்குச் சிகிச்சை

தென்மராட்சி,ஜூலை5

மந்திகை ஆஸ்பத்திரி சிறுவர் வார்ட்டில் கடந்த மாதத்தில் மட்டும் 215 சிறுவர்கள் பல்வேறு நோய்கள் காரணமாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 50 சிறுவர்கள் காய்ச்சலினாலும் 40 சிறுவர்கள் வயிற்றுளைவினாலும் ஏனையோர் ஈரல் அழற்சி, மண்ணெண்ணெய் அருந்தியமை, வெள்ளைப் பூரான் கடித்தமை, சலவருத்தம், நிமோனியாக் காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆஸ்பத்திரியின் வயிற்றுளைவு சம்பந்தமான வார்ட் எம்.எஸ்.எவ். நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டுவருவதால் இந்த வார்ட்டின் சிறுவர் பிரிவும் இந்த வார்ட்டுடன் இணைந்து செயற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சிஹல உறுமய ஆதரவாக வாக்களிக்கும்

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதென சிஹல உறுமய முடிவு செய்துள்ளது.

இந்தப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டால் பெரும் பிரச்சினைகள் உருவாகும். அதனாலேயே பிரேரணையை ஆதரிக்க முடிவு செய்துள்ளதாக அந்தக் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (க-3)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை5

நீர்வேலி செல்லக் கதிர்காம சுவாமி ஆலயத்தின் மகோற்சவ காலத்தில் தெய்வீக பேருரையாற்றிய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக்கல்லூரி ஆசிரியர் சஙீசனுக்கு 'சிவத்தமிழ்ச் சொல்லமுதன்' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில், ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்களினால் பட்டம் வழங்கப்பட்டு பாராட்டுரை நிகழ்த்தப்படும். (க-10)

## சிரமதானம்

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை ஒட்டி ஆலய சுற்றாடல் பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆலயச் சுற்றாடல் பகுதிகளைத் துப்புரவுசெய்து வருகின்றனர். (க-17)

## நாளை

ஆனி 22
வெள்ளிக்கிழமை
திதி: பிரதமை
முன்னிரவு 10.13 வரை.
நட்சத்திரம் : பூராடம்
முற்பகல் 10.35 வரை.
சுபநேரம் : 5.58 - 7.28
ராகுகாலம் : 10.28 - 11.58
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உரத்த சிரிப்பு காலியான மனத்தைக் காட்டுகிறது. சிரிப்பவரே வெல்வார்.

*- ஷேக்ஸ்பியர்.*

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பெரியார் பகுதி, அல்வாய் எனும முகவரியைச் சேர்ந்த கணேசமூர்த்தி ஜெயகாந்தன் என்பவருடைய தே.அ.அ. (இல.770974070V), விசேட அ.அ. (இல.090908669), பல்கலைக் கழக அடையாள அட்டை என்பன நெல்லியடிக்கும் பருத்தித்துறை நகரப் பகுதிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி மொடேர்ண் ஸ்ரோர்ஸில் ஒப்படைக்கவும்.சன்மானம் வழங்கப்படும். (89727)

இல.126/4, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த வி.செல்வநாயகம் என்பவரது தங்கக் கைச்சங்கிலி (1பவுண் 2மஞ்.) 29.06.2001 அன்று நயினாதீவு சென்று வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியுடன் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். T.P 021-3086 (89746)

## ஆனந்தா சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? நோய நீங்குமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்கள்! ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் என்பவற்றின் மூலமாகப் பலன் சொல்லப்படும். தொடர்பு: த.சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிடம், 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (89629)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 30வயது உத்தராட நட்சத்திரம், 7இல் செவ்வாய் (கிரக பாவம் 32) உடைய மல்லாவியில் தொழில்புரிபவருக்கு நற்குணமுள்ள அழகான படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1318, மே/பா.உதயன், யாழ்ப்பாணம்.(89706)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் நிரந்தரமாக வசிக்கும் 1957இல் பிறந்த பரணி நட்சத்திரம் 7இல் செவ்வாய் உள்ள மணமகனுக்குப் படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு:- 383/7, நாவலர் லேன், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (89741)

## படிவம்

ஒப்பந்த அடிப்படையில் தபால் சேவை அலுவலர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 45 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த (உ/த) தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம். (பட்டதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு) மாதச்சம்பளம் ரூ.5000/= மாதிரிப் படிவத்திற்கு: பாரதி, 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/17289)

ஒப்பந்த அடிப்படையில் தபால் சேவைப் படிவம் விற்பனையாகின்றது. விலை 2/= விண்ணப்ப முடிவு திகதி: 20.07.2001. நாயகபாலன், மானிப்பாய். (89769)

## விற்பனைக்கு

ரைப்றைற்றர் (தமிழ், ஆங்கிலம்), றோணியோ இயந்திரம் (மின்சாரத்திலும் இயங்கக் கூடியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- N.ஆனந்தராஜ், தெனியம்பை, வல்வெட்டித்துறை. (89732)

பாவனையிலுள்ள யமகா ஜெனரேற்றர் 3K.W விற்பனைக்கு அல்லது 5K.W லீஸ்ரர் ஜெனரேற்றருக்கு மாற்றுவதற்கு உண்டு. தொடர்பு:- N.T. இரவீந்திரராசா, இல.109, பலாலி றோட், தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (89739)

Cake Beater, Mini, (Kenwood) Electric Kettle, (English Make), Blender (Moulenex) விற்பனைக்குண்டு. தொடர்பு:- இல.320, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பணம். (89729)

8 அடி ஒறிஜினல் டிஸ் அன்ரனா அல்பா கோல்ட் றிசீவருடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 305, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. (89748)

ஒருவயது நிரம்பிய DOBOHER-MANN ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.குமாரவேலு (ஆசிரியர்), இல.132/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (பூங்காவுக்கு அண்மையில் உள்ள ஒழுங்கை) (89760)

வீட்டுத் தளபாடங்கள், ஐசிங் பொருள்கள், Hair Style பொருள்கள், விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சிவன் புது வீதி, நல்லூர். (89765)

## வணிகக் கல்வி A/L

வணிகக் கல்விக்கான பகுதி 11 முழுப்பாடத்திட்டமும், பாகம் 1, பாகம் 11 என இரு பகுதியாக வெளியிடப் பட்டுள்ளன. புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். இ. இரட்ணம், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம். (89768)

## தேவை

கணனியில் தமிழில் Type Setting தெரிந்தவர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்க.

**Vidiyalaya Printers**
***52B, Vembady Road, Jaffna.***

(Note:- Computers, Printers விற்பனைக்கு உண்டு.)
(89764)

# கூட்டுறவு அங்கத்தவர்களுக்குக் கடனுதவி

தென்மராட்சி,ஜூலை5

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்க அங்கத்தவர்கள் 100 பேருக்கு விரைவில் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்படவுள்ளது.

விவசாயம், வியாபாரம், கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு உட்பட சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு 10 தவணைகளில் மீளச் செலுத்தக் கூடிய வகையில் தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் கடன் வழங்கப்படும்.

இக்கடன் வழங்கவென போருட் நிறுவனத்தின் சங்கத்திற்கு 7லட்சத்து 50.ஆயிரம் ரூபாவினை வழங்கவுள்ளதாகச் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். (க-117)

## சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125ஆம் ஆண்டு நிறைவையொட்டி
## விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் சுற்றுப் போட்டிகள்~2001

1) கிரிக்கெட் *(மென்பந்து 7 பேர் கொண்ட - 12 பந்துப் பரிமாற்றம்)*
2) வலைப்பந்தாட்டம்
3) கரபந்தாட்டம் *(செற்றப் முறை)*

***விண்ணப்ப முடிவு திகதி: 15-07-2001***

*மேலதிக விவரங்களுக்கு கல்லூரியின் கழகக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.*

தலைவர் (89771) செயலாளர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 07 - 10 - 1917

மறைவு 07 - 06 - 2001

## திருமதி சின்னம்மா கதிரேசு

அன்போடும் பண்போடும் எம்மை ஆதரித்து வளத்தீர்கள்!
பரிவோடும் பாசத்தோடும் பாரினிலே வாழ்ந்த உங்களை
மறக்கமுடியவில்லையே! பொல்லாத காலன் பறித்திட்டானே!

*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நாளை (06.07.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*
(89767)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 - 03 - 1944

மறைவு 28 - 06 - 1999

## திருமதி பரமேஸ்வரி செல்லத்துரை

திதி:- பூரணை 05.07.2001

உங்கள் சுவடுகள் காலத்தால்
அழியாதவை - உங்கள்
உடலை மட்டுமே நாம் இழந்தோம்.
"நினைவுகள் அழிவதில்லை."

உங்கள் நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்.**

*'தாயகம்'*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
(89761)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் அருணகிரிநாதன்

புங்குடுதீவு-ஊரதீவு ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருணகிரிநாதன் 03.07.2001 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், பொ.நாகேஸ்வரி, சிவலோகநாதன்(பிரபல வர்த்தகர், வெள்ளவத்தை), கனகபூரணி, காசிநாதன், யோகநாதன் (பிரபல வர்த்தகர் வெள்ளவத்தை), புஸ்பராணி, கைலாயநாதன் (சுவிஸ்), ஜெகநாதன் (நோர்வே), விஸ்வநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2001) வியாழக்கிழமை மதியம்12.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கேரதீவு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:-
பொ.நாகேஸ்வரி (சகோதரி)

*புங்குடுதீவு-ஊரதீவு,*
*7ஆம் வட்டாரம்.*
(89766)

## திருமதி புஸ்பவல்லி சிங்காரவேலு

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புஸ்பவல்லி சிங்காரவேலு 02-07-2001 திங்கடகிழமை பிற்பகல் நாவலப்பிட்டியில் இறைபதம் அடைந்துவிட்டார். இவர் சிங்கார வேலுவின் அன்பு மனைவியும் திருமதி சூரியபாலன், திருமதி ஜெயபாலன், பாலமுரளி, பாலமுருகன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ந.ஜெயராமன் (மைத்துனன்)

*வடலியடைப்பு.*
(89770)

# PATRICIAN INSTITUTES
## பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி சிறுவர்களுக்கான புதிய கணனிப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**ஆரம்பம்: 16-07-2001**

இன்றைய அறிவுசார் சமுதாயத்தை எதிர்கொள்ளத்தக்க வகையில் வேகமாக முன்னேறிவரும் கணனி உலகில், வளர்ந்துவரும் மாணவச் செல்வங்களின் கணனி அறிவினை விருத்தி அடையச் செய்யும் வகையில் மிகவும் குறைந்த கட்டணத்துடனும், கூடிய செய்முறைகளுடனும் பின்வரும் கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன.

எனவே சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**(1) Year 3 - Year 5**
**CHILDREN COMPUTER STUDIES - I**
**CHILDREN GAMES - I**

**(2) Year 6 - Year 10**
**CHILDREN COMPUTER STUDIES - II**
**CHILDREN GAMES - II**

***NOTE***: பாடசாலை விடுமுறை நாள்களில் காலையிலும், மாலையிலும், பாடசாலை நாள்களில் மாலை நேரங்களிலும் வகுப்புகள் நடைபெறும். இத்துடன் ஏனைய கணனிப் பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

*மேலதிக விவரங்களுக்கு:*

REGISTRAR.
PATRICIAN INSTITUTES
59, ST. PATRICK'S ROAD,
JAFFNA.

(C/17304)

# காயங்களே! ஆறுங்களே!

காயமடைதல் மனிதன் தோன்றியதிலிருந்து நிகழ்கிறது. மனிதன் காயப்படுதலும் குணப்படுதலும் அன்றேல் மரணமடைதலும் ஆதியிலிருந்து நடைபெறுகிறதென்றாலும் இன்று அதிலும் எமக்கு காயப்படுவதற்கான 'வசதி வாய்ப்புக்கள்' அதிகம்!

காயங்கள் உடலுக்குப் பழகிப் போனவை. உடல் காயங்கள் ஏற்படுகிற பொழுது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டு காயங்களை ஆற்றுகிறது.

உள்ளத்திற்கு காயங்கள் புதிது. அதுவும் 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது" போன்ற வலியை உணரும். அது வெளி ஆதரவை நாடி

## சுகநலம்

நிற்கும்.

காயங்கள் சிலருக்கு ஏற்பட்டு உடனே காய்ந்து போகின்றன. சிலருக்கு அவை மாறாப் புண்ணாக நீடித்து புண்ணான வாழ்வாகிறது. புண்களைப்புரிந்து கொள்வது கடினமே! (பெண்களைப் போலவே என்று 'சில' ஆண்கள்) காயங்கள் தோன்றுவதும் உயிரிழப்பும் குணமடைதலும் என நீண்டு செல்லும் விடயம். அது 'ஒரு புண்ணின் கதை' என்று தொலைக்காட்சித் தொடரைத் தயாரிக்கலாம்.

இது என்பு தோல் போர்த்த உடம்பு. (மேலே காஷ்மீர் கம்பளமும் போர்க்கலாம்) எளிமையாகச் சொன்னால் உள்ளே எலும்பு, சுற்றிவரத் தசைகள் வெளியே அழகாய்த் தோல்!

உடலின் பகுதிகளுக்கு ஏற்ப இந்த அமைப்பு மாறுபடும். உடல், தலை, கழுத்து, நெஞ்சுப்பகுதி, வயிறு அவயவங்கள் என பிரிக்கப்படக் கூடியது.

தோல், தசை, என்பு என்ற அமைப்பு தலை, நெஞ்சு, வயிற்றுப் பகுதிகளில் உள்ளே குழிகள் அல்லது கூடுகள் போன்ற அமைப்புகளாக இருக்கின்றன. இந்த உறுதியான சுவருள்ள கூடுகளுக்குள் முக்கியமான அங்கங்கள் அமைந்திருக்கும்.


மண்டையோட்டுக் குழிக்குள் மூளையும் (சிலர் இதைக் களிமண் என்று[illegible]) அதனோடு சார்ந்த அமைப்புகளும் காணப்படும்.

விலா எலும்புத் தசைக் கூட்டுக்குள் சிட்டுக்குருவி சிறகடிப்பது போல் இதயம் துடிக்க சுவாசப்பைகள் அருகிருக்கும். கீழே வயிற்றுக்குழிக்குள் 'சாப்பாடு' சம்பந்தமான உறுப்புகள் மற்றும் இடுப்பெலும்புக் கூட்டுக்குள் சிறுநீர்ப்பை; முள்ளந்தண்டுக்குள் முண்ணான்.....

இப்படிப் பார்க்கப் போனால் குறை சொல்லக் கூடாது. முக்கிய உறுப்புகள் எல்லாம் பாதுகாப்பாய் குந்தி இருக்கின்றன.

பாதுகாப்புகள் எல்லாம் நவீன விஞ்ஞான ஆயுதங்களின் முன் கேள்விக்குறியாக்கப்பட்டு விட்டன. (தோட்டாக்கள், சன்னங்கள் முதலியன)

ஆனால் பாவம் தோல். உடலை மூடி வெளியில் இருப்பது. செல்லமாய்க் கிள்ளினால் என்ன, நெருப்பால் சுட்டால் என்ன, பாதிக்கப்படுவது அதுதான். அவன் கறுப்பு, அவள் சிவப்பு என்று சொல்ல வைப்பது தோல். அது இல்லை என்றால் அழகில்லை. அது ஒரு கவசம். மேற்றோல் உட்தோல் எனப் பிரிக்கப்படக் கூடியது. மேற்றோல் பல படைகளைக் கொண்டது. வெளிப்படையாகக் 'கரற்றின்' என்ற பொருள் காணப்படுகிறது.




சிலரில் இன்னும் கொஞ்சம் வெளிபடையாக "பவுடர் மற்றும் கிறீம்" இருக்கக்கூடும்.

தோலின் சிறப்பு நீரிழப்பைத் தடுத்தல். உடலுக்குக் கவசமாய் மூடியாய் தொழிற்படுதல். தோல் நீரை உட்புகவிடுவதில்லை. (நீரில் ஊறிய பயறுபோல் பருத்துவிடுவோம்) எங்கும் பரவிக்கிடக்கின்ற கிருமிகளை அழிக்கக் கூடிய, அகற்றக் கூடிய சக்தியுடனும் அவை உடலினுள் புகாது தடுக்கின்ற தடுப்புச் சுவராகவும் இருக்கின்றது.

வியர்வைச் சுரப்பிகள் கிருமிகளுககு 'அசிட்'. எண்ணைச் சுரப்பிகளும் அவ்வாறே. கிருமிகள் தோலில் வாசம் செய்யத் தொடங்கினால் அது மற்றவர்களை அருகில் வரவிடாது! தோல் பலமானது. தோலில் கொளுக்கியிட்டு தூக்குக்காவடி கூட எடுக்கிறார்கள்.

சூடு, குளிர், வெப்பம், வலி, தொடுகை என்று உடலின் மிகப் பெரிய 'உணர்வு பூர்வமான' அமைப்பு. வலி, சூடு போன்ற உணர்வுகளை நரம்பு முனைகளூடே கடத்தி 'தாக்கு அல்லது தப்பியோடு' என்ற தயார் நிலைக்கு உடலைக் கொண்டு வர உதவுகிறது.

இத்தகைய தோல்தான் முதன் முதலில் அபாயங்களுக்கு முகம் கொடுக்கிறது.

பொன்னர் சின்னர் மதுவெறி மயக்கத்தில் மோதிக்கொண்டபோது - பொன்னருக்கு சின்னரின் தோல் படைகள் பற்றிய அறிவு இருக்கவில்லை.

கத்தி இறங்கிய இடமெல்லாம் இழையங்களைச் சிதைத்துக் கொண்டு சென்றது.

தோலின் படைகளை ஊடறுத்துக் கொண்டு நரம்பு முனைகளை வெட்டி இடையிலகப்பட்ட சுரப்பிகளை, மயிர்த்தண்டுகளை சிறிய, பெரிய இரத்தக்குழாய்களை எல்லாம். வெட்டி நாசமாக்கி கொழுப்புப்படை

**டாக்டர் சு.கிருஷ்ணேந்திரன்**

களைக் கடந்து தசைகளை வெட்டி, எலும்பில்பட்டு திரும்பியது.

வெட்டப்பட்ட நரம்பு முனைகள் கடுமையானவலியை சின்னரின் (சின்ன) மூளைக்கு உணர்த்தின. அய்யோ என்றார் சின்னர். வெட்டப்பட்ட இரத்தக் குழாய்களில் இருந்து இரத்தம் வெட்டுவாய்களுக்குள் பாய்ந்து வெளியில் பரவி கையை நனைத்தது.

இரத்தம்-, காயம்-, தகராறு, பரபரப்பு கூடிய சனங்களிலிருந்து - சின்னருக்கு முதலுதவி செய்தார்கள். பெருக் கெடுத்தோடும் இரத்தம். வெட்டுவாயை - துணியை மடித்து வைத்துக் கட்டினார்கள். ஒரு துணி நனைய மேலே இன்னுமொரு துணி மடிப்பு வைத்து அழுத்தக் கட்டினார்கள். காயம்பட்ட பகுதியை இதய மட்டத்துக்கு மேலே உயர்த்திப் பிடித்தார்கள்.

கார் வந்தது சின்னர் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

வெட்டுண்ட களத்திலிருந்து யாரும் சொல்லாமலே உடல் என்கிற உன்னத படைப்பே தன்னுடைய செயற்பாடுகளை தொடங்கிவிடுகிறது. உடல் என்னதான் செய்யும்?

(தொடரும்)

# இயந்திர வாழ்க்கை ஏற்படுத்தும் மனச் சோர்வு நீங்க வழி உண்டா?

இன்றைய வாழ்க்கை இயந்திர வாழ்க்கை என்பதை எல்லோருமே பேசக் கேட்கிறோம். இன்று குழந்தைகள் முதல் பெரியவர் வரை எதிலும் அவசரமும், படபடப்பும் உடையவர்களாக இருப்பதையும் நாம் அறிவோம். நமது மூதாதையர்களுடைய காலத்தில் இப்படியான படபடப்புகள் மிகக் குறைவே. சனத் தொகைப் பெருக்கம், வேலை வாய்ப்புப் பிரச்சினை, நவீன வாழ்க்கை வசதி காரணமாக ஒவ்வொரு மனித மனமும் பதட்டமடைய நேரிடுகின்றது. இதனால் அனேகமான 'மக்கள் மனச்சோர்வு என்கின்ற (Mental Depression) நோய்க்கு ஆளாகின்றார்கள்.

இதனால் படிப்படியாக கலக்கமும், தயக்கமும், தெளிவற்ற சிந்தனையும், ஞாபகக்குறைவும், நித்திரையின்மையும் எதிலும் அக்கறையின்மையும், பயமும், சந்தேகமும் நம்பிக்கையீனமும் உருவாகின்றன. மன அமைதியும், உடல் உறுதியும் பெறுவதற்கு இயற்கை நிவாரணமாக நமது மூதாதையர் கண்ட வழிகள்தான் தியானம் செய்தல், பிராணாயாமம் என்கின்ற மூச்சுப் பயிற்சி என்பனவாம். இன்றைய மக்கள் இப்பயிற்சி முறைகளைக் கையாளாது போனதால் தான் அனேக நோய்களுக்கும், மனச் சோர்வுக்கும் ஆளாக நேரிட்டுள்ளது.

மனச் சோர்வு அதிகம் உள்ளவர்கள் இடது பக்க நாசி வழியாக மூச்சை இழுத்து வெளிவிட்டால் மன அமைதியும், சந்தோஷமும் ஏற்படும் என்றும், வலது நாசி வழியாக மூச்சை இழுத்து வெளிவிட்டால் கல்விமான்களாயும், விஞ்ஞானிகளாயும், பொறியியலாளர்களாயும், டாக்டர்களாயும் வரவிரும்பும் மாணவர்களுக்கு வாய்ப்பு அதிகம் என்றும் சித்தர்களின் கூற்றுக்களிலிருந்து உய்த்துணர முடிகின்றது.

எமது வாழ்க்கையில் எதிர்பார்ப்பு, பேராசை என்ற இரண்டையும் கை விட்டோமானால் மனச்சோர்வு வரவே மாட்டாது. அப்படி வந்து விட்டால் அதற்கு எளிய முறையில் தீர்வு காண சித்தர்கள் காட்டிய சித்த மருத்துவம் சிறந்த வழிகளைக் கூறியுள்ளது. ஆம், வல்லாரை, அஸ்வகந்தி, சாத்தாவாரி, சங்கபுஷ்பி ஆகிய மூலிகைகளைச் சேர்த்து இடித்தெடுத்த சூரணமாகவும், குடிநீராகவும் அருந்துவதால் ஞாபக சக்தியும், உற்சாகமும் உருவாகி மனச்சோர்வு மறைந்து போகும்.

மேலும் அஸ்வகந்தி லேகியத்துக்குள் பவளம்பஸ்பம் அல்லது முத்துபஸ்வம் இரண்டு நெல் எடைப் பிரமாணம் எடுத்துப் பொரித்து காலையும், மாலையும் பாலுடன் அருந்துவதால் நரம்புத் தளர்ச்சி, மனச்சோர்வு, ஞாபகக்குறைவு ஆகியன நீங்கி உடலும் உள்ளமும் ஒருங்கே உறுதியடைய முடியும். அத்துடன் அகாலத்தில் ஏற்படுகின்ற முதுமை, இளநரை, உடல் வரட்சி யாவும் ஓடிப்போகும்.

சகிப்புத் தன்மையும், பொறுமையும், வெற்றியும் கிட்ட வேண்டுமென்று விரும்புவோர் சித்தர்கள் காட்டிய பச்சிலைகளை உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்துவதே சிறந்த வழியாகும். உளப் பூரிப்புடன் உறுதியுடன் வாழ, நாம் தினமும் உணவில் சேர்க்கக் கூடிய பொன்னாங்காணி, வல்லாரை, கரட், பசளி, சாறணை, தக்காளி, முகட்டை, முளைக்கீரை, அகத்தியிலை, முருங்கையிலை, பூசனி, பாகல் ஆகியன எமது வீட்டுத் தோட்டத்தில் உருவாக வேண்டும். பச்சிலைகளைப் பாவிப்பதால் உடல் நோயும் உளநோயும் நீங்கி உற்சாகமுடன் கடமைகளைச் செய்வோமாக!

**-டாக்டர் த.சிவானந்தன்.**

# வாட்டுகிறது கோடைக்காலம்; உடல் வரட்சி நீங்க வெள்ளரி


**தற்போது குடாநாட்டு மக்கள் கோடைக்காலக் கொடுவெயிலால் பரிதவிக்கிறார்கள். மூலை முடுக்கெல்லாம் காய்ச்சல், கண் வருத்தம், சின்னமுத்து, பொக்களிப்பான், வயிற்றோட்டம், ஆகிய உஷ்ண வியாதிகளால் மக்கள் பெரும் அவஸ்தைப்படுவதை அனைவரும் அறிவர். இவற்றிலிருந்து பாதுகாப்புப்பெற மக்கள் ஒவ்வொருவரும் குளிர்மை தரும் கனிவகைகளைத் தேடி, நாடி, விரும்பி உண்பது மிக மிக அவசியமாகும்.**

**குடாநாட்டில் பெரும்பாலும் பெறக்கூடிய பழவகைகளில் வெள்ளரி, வத்தகப்பழங்கள் மிகச்சிறந்த பலன்களை இவ் வேளையில் தரக் கூடிய சக்திவாய்ந்தவை என்பதை அனைவரும் அறிவது அவசியமாகும். வெள்ளரிக்காய் கரப்பான், அக்கி போன்ற வியாதிகளை நீக்கும். வெள்ளரிப்பழம் தாகம், உடல் வரட்சி, களைப்பு, பசி இவற்றைப் போக்கும். வெள்ளரி விதை 35 கிராம் எடுத்து அரைத்து 200 மி.லீற்றர் நீரில் கரைத்து வடிகட்டி சர்க்கரை சேர்த்து 50 மி.லீற்றர் விதம் தினமும் பருகிவர கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, நீரெரிச்சல், கண்எரிச்சல் ஆகியன நீங்கும். அத்துடன் தொற்று நோய்களும் (Infection disease) நீங்கும்.**

**எனவே மக்கள் ஒவ்வொருவரும் வெள்ளரி, வத்தகப் பழங்கள் மற்றும் முந்திரிகைப்பழம், இதரை வாழைப்பழம் என்பனவற்றை தற்போது நிலவும் கோடைக்கால கொடுமை நீங்கத் தேடி வாங்கி உண்பது மிகவும் வேண்டற்பாலது.** ☆

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 08 - 09 - 1943



இறப்பு 17 - 06 - 2000

## அமரர் ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(ஓய்வு பெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி)

திதி:- 05-07-2001 பூரணை

அன்பால் எவரையும் இனிதிங்கே
தன்பால் ஈர்த்த தகையோனே!
எம்பால் உறுதியோடு இருந்தாயை
தென்பால் ஆடினான் அழைத்தானே!
இல்லத்தின் தேவைகள் அறிந்தே
சொல்லாமலே ஆவன செய்தவரே!
இல்லத்தில் இல்லாமல் நீங்கள்
சொல்லாமல் சொர்க்கம் போனீரே!
புத்திரர் யாமிருவர் இங்கே
சித்திகள் பெற்றுச் சிறந்திடவே!
உத்திகள் கூறி உரமிட்ட அப்பாவே!
அத்தனையும் யாமிங்கு உளம் மறவோமே!
ஆண்டொன்று உருண்டோடியதே!
மாண்டும் உங்கள் நினைவே நெஞ்சினில்
மீண்டும் பிறவா பெருவாழ்வு தன்னை
ஆண்டவர் அளித்தார் ஆறுதல் அடைவோம்!

- மனைவி, மக்கள்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(89653)

# தே.ஐ.மு. தலைவராக பேரியல் செயற்பட நீதிமன்றம் அனுமதி

## இடைக்காலத் தடை உத்தரவு ரத்து

கொழும்பு,ஜீலை5

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகப் பேரியல் அஷ்ரப் செயல்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவு நேற்றுமுன்தினம் ரத்துச்செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உறுப்பினர்கள் இருவர் தாக்கல் செய்த மனு ஒன்றை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தேசிய ஐக்கிய முன்னணி தலைவராகப் பேரியல் இயங்குவதற்குத் இடைக்காலத்தடை விதித்திருந்தது.

இந்த மனுவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனு மீது சட்டத்தரணிகளின் வாதங்கள் திங்கள், செவ்வாய் இரு தினங்கள் இடம்பெற்றன.

இந்த வாதங்களைக் கேட்ட கொழும்பு மாவட்ட நீதிபதி சுனில் ராஜபக்ஷ தமது தீர்ப்பில் -

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகப் பேரியல் அஷ்ரப் தொடர்ந்து பணியாற்றலாம் என்று தெரிவித்தார்.

அதேவேளை-

கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுப் பொறுப்பை பேரியல் அஷ்ரப் நேற்று மீண்டும் ஏற்கவிருந்தார்.

நேற்றுமுன் தினம் பிற்பகல் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

ரவூப் ஹக்கீமை அமைச்சரவையிலிருந்து வெளியேற்றியதைக் கண்டித்தே அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ததாகவும் எனினும் ஹக்கீம் மனிதாபிமானமற்ற முறையில் நடந்ததால் அவருக்கு எதிராக - மக்கள் நலனுக்காக - மீண்டும் அமைச்சர் பதவியை தாம் ஏற்பதாகவும் - அவர் சொன்னார்.

(க-3-9)

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# கொக்குவில் பகுதியில் கைதான இளைஞர் செவ்வாயன்று விடுதலை

யாழ்ப்பாணம்,ஜூலை5

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த மே மாதம் 24 ஆம் திகதி கொக்குவில் பகுதியில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பொலீஸாரினால், நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட விவேகானந்தராசா கமல்ராஜ் (கொக்குவில் வடக்கு) என்ற இளைஞரே விடுதலை செய்யப்பட்டவராவார். இவர் மீது வழக்குத் தொடரப், போதிய சாட்சியம் இல்லை என்று பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டதையடுத்து இவரை நீதிவான் விடுதலைசெய்தார்.

#### இரு இளைஞரும் விளக்கமறியலில்

இதேவேளை -

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, காங்கேசன் துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலீஸாரினால் ஆஜர் செய்யப்பட்ட இந்த இரு இளைஞர்களையும், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட சண்முகநாதன் குமணன் (கண்டாவளை, கிளிநொச்சி) என்ற இளைஞரை ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவரது சைக்கிளும் பொலீஸாரால் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி குருநகர் கடற்கரைப்பில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட செல்வராஜா செல்வரஞ்சன் அல்லது கண்ணப்பன் (ஜெயபுரம், கிளிநொச்சி) என்ற இளைஞரை எதிர்வரும் 17 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(க-6)


## இரண்டாவது பிறந்த தின வாழ்த்து



HAPPY BIRTHDAY

### செல்வன் குகதாஸ் துவாரகன்

அளவெட்டியைச் சேர்ந்த
குகதாஸ் - உதயச்சித்திரா தம்பதிகளின் -
செல்வப்புதல்வன் துவாரகன்

தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் நாளை (06-07-2001) வெள்ளிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் துவாரகனை லிபியாவில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, டோகாவில் இருக்கும் சித்தப்பாமார், கொழும்பில் இருக்கும் சித்தி, அளவெட்டியில் இருக்கும் மயூர் சித்தப்பா, அம்மப்பா, அம்மம்மா, சுவிஸில் இருக்கும் பெரிய மாமா, அத்தை, சதுர்ணா, பெரியப்பா, பெரியம்மா, டிலக்ஷன், சித்திமார், கொழும்பில் இருக்கும் சின்னமாமா, அத்தை குடும்பம், யாழ்ப்பாணத்திலிருக்கும் மாமா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், அனைவரும் கும்பளாவளைப் பிள்ளையார் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*அளவெட்டி மத்தி,*
*அளவெட்டி.*

(89685)

குகதாஸ் குடும்பம்,
அப்பப்பா குடும்பம்.



உ

## இதயம் நிறைந்த திருமண நன்றி நவிலல்

கடந்த 27-06-2001 புதன்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இனிதே நிறைவு பெற்ற எமது திருமணத்திற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். குறிப்பாக 'துர்க்காதுரந்தரி' "சிவத்தமிழ்ச் செல்வி" செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கௌரவ மாவை சோ. சேனாதிராசா, கௌரவ சி.சிவமகாராசா, கௌரவ அ.விநாயகமூர்த்தி ஆகியோருக்கும், யாழ்.மாநகர சபை முதல்வர் உயர்திரு.ந.இரவிராஜ் அவர்களுக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணி அங்கத்தவர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், மற்றும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் "வாழ்த்துச் செய்தி" வழங்கிய புளொட், மூளாய் இ.இ.மன்றத்தினர், திரு.க. பாலச்சந்திரன், தெல்லிப்பழை ஸ்ரீ காசிவிநாயகர் - பாலர் ஞானோதயசபை சிவஸ்ரீ கணேசலிங்கக் குருக்கள் அவர்களுக்கும் திருமண நிகழ்வின்போது ஆசிகூற வந்த சிவாச்சாரிய அந்தணப் பெருமக்களுக்கும் மாநகரசபை ஆணையாளர் - உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், இன்னிசைக் கச்சேரி நிகழ்த்திய 'சங்கீத பூஷணம்' கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்களுக்கும் ஏனைய இசையுலக மேதைகள், ஆசிரியப் பெருந்தகைகள், நண்பர்கள் அனைவருக்கும், வாழ்த்துச் செய்திமடல்கள், தந்திகள் அனுப்பியோருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி மறவாத அன்புடன்
த.முகுந்தன் - பங்கயச்செல்வி
தம்பதிகள்

*'மங்கள கிரி'*
*மூளாய் சுழிபுரம்.*

(89734)


# தொலைபேசிக் கட்டணம் 50 வீதத்தால் அதிகரிக்கும்

கொழும்பு,ஜூலை5

தொலைபேசிக் கட்டணங்களை ஐம்பது சதவீதத்தால் அதிகரிப்பதென ஸ்ரீலங்கா ரெலிகொம் முடிவு செய்துள்ளது.

தொலைபேசி வாடகைக் கட்டணம் 200 ரூபாவில் இருந்து 300 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

தற்சமயம் மாதம் ஒன்றுக்கு 100 யுனிட்டைப் பயன்படுத்துவோர் ஒரு யுனிட்டுக்கு ஒரு ரூபா பத்துச் சதத்தைச் செலுத்துகின்றனர். புதிய கட்டணத்துக்கு ஒரு யுனிட்டுக்கு இரண்டு ரூபாவாகும்.

இதே போன்று 101 முதல் 300 யுனிட்வரை பயன்படுத்துவோர் தற்சமயம் ஒரு யுனிட்டுக்கு ஒரு ரூபா 40 சதம் செலுத்துகின்றனர். இனி மேல் இந்த ஒரு யுனிட்டுக்கு 2 ரூபா செலுத்தவேண்டும்.

301 முதல் 500 யுனிட்வரை பயன்படுத்துவோர் தற்சமயம் ஒரு யுனிட்டுக்கு 2 ரூபா 20சதம் செலுத்துகிறார்கள். இனிமேல் இவர்கள் யுனிடடுக்கு 2 ரூபா 50சதம் செலுத்த வேண்டும்.

500 யுனிட்டுக்கு அதிகம் பயன்படுத்துவோர் தற்சமயம் ஒரு யுனிட்டுக்கு 2.80 சதம் செலுத்துகிறார்கள். இனிமேல் அப்படியானவர்கள் ஒரு யுனிட்டுக்கு 3 ரூபா செலுத்த வேண்டும்.

தொலைபேசி இணைப்பைப் பெற தற்சமயம் 13 ஆயிரத்து 500 ரூபா கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. இந்தக் கட்டணம் 18 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

மத அமைப்புக்களும், நிறுவனங்களும் தற்சமயம் தொலைபேசி வாடகையாக மாதம் ஒன்றுக்குச் செலுத்தும் 50 ரூபா கட்டணம் 200 ரூபாவாக அதிகரிக்கப்படும். வர்த்தக நிறுவனங்களுக்கான கட்டணம் 360 ரூபாவில் இருந்து 500 ரூபாவாக அதிகரிக்கும்.

உள்ளூர்த் தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கப்படும் அதே நேரம் வெளிநாடுகளுக்கான கட்டணங்கள் மேலும் குறைக்கப்படவுள்ளன.

(க-3)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்குப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் கடந்த மாதம் 29ஆம் திகதிவரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (170999ஏ) | (186251ஏ) | (186251பி) |
| (188366ஏ) | (189165ஏ) | (189616ஏ) |
| (189616பி) | (189616சி) | (189701ஏ) |
| (189703ஏ) | (189704ஏ) | (189708ஏ) |
| (189713ஏ) | (189714ஏ) | (190767ஏ) |
| (190803ஏ) | (190803பி) | (191015ஏ) |
| (191229ஏ) | (191229பி) | (191229சி) |
| (191964ஏ) | (193045ஏ) | (193046ஏ) |
| (193050ஏ) | (193251ஏ) | (193494ஏ) |
| (193494பி) | (194406ஏ) | (194406பி) |
| (195152ஏ) | (195185ஏ) | (195185பி) |
| (195190ஏ) | (195220ஏ) | (195220பி) |
| (195220சி) | (195238ஏ) | (195268ஏ) |
| (195329ஏ) | (195329பி) | (195334ஏ) |
| (195338ஏ) | (195340ஏ) | (195340பி) |
| (195341ஏ) | (195347ஏ) | (195347பி) |
| (195360ஏ) | (195374ஏ) | (195374பி) |
| (195382ஏ) | (195382பி) | (195385ஏ) |
| (195393ஏ) | (195408ஏ) | (195413ஏ) |
| (195417ஏ) | (195424ஏ) | (195424பி) |
| (195424சி) | (195425ஏ) | (195425பி) |
| (195425சி) | (195425டி) | (195425ஈ) |
| (195425எவ்) | (195425ஜி) | (195437ஏ) |
| (195437பி) | (195437சி) | (195437எவ்) |
| (195437ஜி) | (195442ஏ) | (195443பி) |
| (195443சி) | (195443டி) | (195451ஏ) |
| (195451பி) | (195451சி) | (195451டி) |
| (195451ஈ) | (195451எவ்) | (195451ஜி) |
| (195451ஏச்) | (195451ஜே) | (195451கே) |
| (195451எல்) | (195451எம்) | (195451என்) |
| (195460ஏ) | (195462பி) | (195462சி) |
| (195465ஏ) | (195465பி) | (195465சி) |
| (195465டி) | (195481ஏ) | (195481பி) |
| (195484ஏ) | (195498ஏ) | (195504ஏ) |
| (195505ஏ) | (195505பி) | (195518ஏ) |
| (195519ஏ) | (195519பி) | (195526ஏ) |
| (195526பி) | (195528ஏ) | (195528பி) |
| (195536ஏ) | (195537ஏ) | (195537பி) |
| (195548ஏ) | (195550ஏ) | (195554ஏ) |
| (195554பி) | (195554சி) | (195566ஏ) |
| (195600ஏ) | (195600பி) | (195707ஏ) |
| (195721ஏ) | (195728ஏ) | (195736ஏ) |
| (195737ஏ) | (197204ஏ) | (197215ஏ) |
| (197222ஏ) | (197223ஏ) | (197223பி) |
| (197237ஏ) | (197246ஏ) | (197269ஏ) |
| (197269பி) | (197279ஏ) | (197295ஏ) |
| (197295பி) | (197297ஏ) | (197300ஏ) |
| (197302ஏ) | (197302பி) | (197311ஏ) |
| (197324ஏ) | (197335ஏ) | |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| (195447ஏ) | (195464ஏ) | (195464பி) |
| (195464சி) | (195570ஏ) | (195570பி) |
| (195579ஏ) | (195613ஏ) | (195613பி) |
| (195721எவ்) | (195721ஜி) | (195721ஏச்) |
| (195721ஜே) | (195748ஏ) | (195748பி) |
| (197228ஏ) | | |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (173614ஏ) | (184505ஏ) | (184505பி) |
| (185977ஏ) | (185977பி) | (189694ஏ) |
| (189694பி) | (189694சி) | (189694டி) |
| (189694ஈ) | (189722ஏ) | (189722பி) |
| (190883ஏ) | (190931ஏ) | (190931பி) |
| (190931சி) | (191008ஏ) | (191008பி) |
| (191008சி) | (191178ஏ) | (193073ஏ) |
| (193234ஏ) | (193234பி) | (193234சி) |
| (193234டி) | (193234ஈ) | (193234எவ்) |
| (193375ஏ) | (194425ஏ) | (195186ஏ) |
| (195219ஏ) | (195219பி) | (195245ஏ) |
| (195245பி) | (195253ஏ) | (195253பி) |
| (195254ஏ) | (195254பி) | (195278ஏ) |
| (195278பி) | (195278சி) | (195278டி) |
| (195278ஈ) | (195278எவ்) | (195278ஜி) |
| (195426ஏ) | (195428ஏ) | (195430ஏ) |
| (195430பி) | (195431ஏ) | (195431பி) |
| (195431சி) | (195431டி) | (195431ஈ) |
| (195432ஏ) | (195432பி) | (195432சி) |
| (195443ஏ) | (195462ஏ) | (195480ஏ) |
| (195490ஏ) | (195490பி) | (195490சி) |
| (195490டி) | (195490ஈ) | (195517ஏ) |
| (195517பி) | (195530ஏ) | (195530பி) |
| (195534ஏ) | (195539ஏ) | (195539பி) |
| (195540ஏ) | (195542ஏ) | (195556ஏ) |
| (195556பி) | (195556சி) | (195568ஏ) |
| (195568பி) | (195700ஏ) | (195719ஏ) |
| (195726ஏ) | (195726பி) | (195738ஏ) |
| (195741ஏ) | (197203ஏ) | (197203பி) |
| (197213ஏ) | (197214ஏ) | (197217ஏ) |
| (197217பி) | (197217சி) | (197249ஏ) |
| (197254ஏ) | (197273ஏ) | (197273பி) |
| (197273சி) | (197296ஏ) | |

கடந்த மாதம் 30ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| (189169ஏ) | (190968ஏ) | (190968பி) |
| (191112ஏ) | (193393ஏ) | (193467ஏ) |
| (193481ஏ) | (193481பி) | (195262ஏ) |
| (195269ஏ) | (195295ஏ) | (195295பி) |
| (195295சி) | (195320ஏ) | (195330ஏ) |
| (195375ஏ) | (195381ஏ) | (195381பி) |
| (195423ஏ) | (195454ஏ) | (195456ஏ) |
| (195458ஏ) | (195488ஏ) | (195488பி) |
| (195488சி) | (195488டி) | (195503ஏ) |
| (195503பி) | (195512ஏ) | (195520ஏ) |
| (195584ஏ) | (195718ஏ) | (195718பி) |
| (195718சி) | (195743ஏ) | (195743பி) |
| (195746ஏ) | (197201ஏ) | (197207ஏ) |
| (197207பி) | (197209ஏ) | (197215ஏ) |
| (197225ஏ) | (197225பி) | (197238ஏ) |
| (197253ஏ) | (197256ஏ) | (197256பி) |
| (197263ஏ) | (197264ஏ) | (197264பி) |
| (197303ஏ) | (197303பி) | (197304ஏ) |
| (197314ஏ) | (197318ஏ) | (197333ஏ) |
| (197333பி) | (197333சி) | (197333டி) |
| (197333ஈ) | (197333எவ்) | (197333ஜி) |
| (197333எச்) | (197333எம்) | (197333என்) |
| (197333ஓ) | (197333பீ) | (197333கியூ) |
| (197333யூ) | (197354ஏ) | (197373ஏ) |
| (197388ஏ) | (197388பி) | (197464ஏ) |
| (197473ஏ) | (197373பி) | (197389ஏ) |
| (199730ஏ) | | |

### கோப்பாய்

| | |
|---|---|
| (197315ஏ) | (197315பி) |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| (193190ஏ) | (193190பி) | (193190சி) |
| (193190டி) | (193422ஏ) | (193422பி) |
| (193422சி) | (195516ஏ) | (195592ஏ) |
| (195592பி) | (195595ஏ) | (197274ஏ) |
| (197274பி) | (197274சி) | (197323ஏ) |
| (197323பி) | (197323சி) | (197323டி) |
| (197323ஈ) | (197323எவ்) | (197323ஜி) |
| (197323எச்) | (197323ஐ) | (197323ஜே) |
| (197323எம்) | (197323என்) | (197323ஓ) |
| (197352ஏ) | (197352பி) | (197352சி) |
| (197352டி) | (197368ஏ) | (197368பி) |
| (197392ஏ) | (197415ஏ) | (197416ஏ) |
| (197416பி) | (197889ஏ) | (197889பி) |

# அன்பின் சக்தியே அனைத்தையும் இயக்குகிறது!

**இன்று குருபூர்ணிமாவாகும். பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா கடந்த குருபூர்ணிமா தினத்தன்று (16.07.2000) வழங்கிய அருளுரையின் ஒருபகுதி இங்கு பிரசுரமாகிறது.**

அன்பின் வடிவங்களே!

இன்று நாம் குருபூர்ணிமா விழாவைக் கொண்டாடுகின்றோம். யார் குரு? 'கு' என்பது குணாதீதன் (குணங்களற்றவன்) என்பதைக் குறிக்கிறது. 'ரு' என்பது ருபவர்ஜிதா (உருவமற்றவன் என்பதைக் குறிக்கிறது.

குரு என்ற வார்த்தைக்கு வேறு ஒரு விளக்கமும் இருக்கிறது. 'கு' என்றால் இருட்டு, 'ரு' என்றால் இருளை விரட்டுவது எனப்பொருள். ஆகவே கடவுளே-யாருக்கு குணங்களும், உருவமும் இல்லையோ - உண்மையான குரு.

### அன்பின் சக்தி

அன்பின் சக்திதான் இவ்வுலக உருண்டையை எவ்வித ஆதாரமோ, பிடிமானமோ இன்றி உருளச் செய்கிறது. அன்பின் சக்திதான் வானத்துத தாரகைளைத் தரையில் விளாமல் தாங்கிப் பிடிக்கிறது. அன்பின் சக்திதான் உலகங்களுக்கிடையே இடையறாது காற்று வீசச் செய்கிறது. இந்த அன்பின் சக்தி அளவிடற்கரியது; மிகவும் ஆச்சரியமானது; அதற்கு மாற்றாகக் காட்டக்கூடியது எதுவும் கிடையாது. பிரபஞ்சம் முழுமையும் அன்பின் சக்தி ஊடுருவி நிற்கிறது. படைப்பு முழுவதுமே அன்பினில் முழுமையாகக் கலந்து இருக்கிறது.

இறைவன் அன்பானவர். அன்பு கடவுளின் வடிவம். பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணர் 'அனைத்து ஜீவராசிகளும் எனது தெய்வத்தின் நிரந்தரமான சிறு பொறிகள்.' (மமைவாம்ஸோ ஜீவலோகே ஜீவபூத ஸனாதனக) இறைவன் அன்பே வடிவானவர். ஆதலால் இவ்வுலகம் முழுமைக்கும் தனது அன்பைப் பொழிகிறார். அதைப் போலவே மனிதனும் தன்னிடம் இருக்கும் அன்பை ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.



அன்பின் தத்துவம் என்பது வருணனைக்கும், விவரிப்பிற்கும் அப்பாற்பட்டது. அன்பின் புனிதத் தன்மையை மனிதனால் புரிந்து கொள்ள முடியாததால், அதனை உலகாயுதமான பௌதிகப் பொருள்கள் மீது செலுத்துகிறான். இறைவன் அனைத்துக் குணங்களையும் கடந்தவர். அதனையே அன்பிற்கும் எடுத்துக்காட்டாகச் சொல்லாம்.

### உறவுகள்

மனிதன் அன்பைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் தன் வாழ்க்கையையே வீண் அடித்துக் கொள்கிறான். தாய்கக்கும் குழந்தைக்கும் இடையே இருக்கும் உறவைக் குறிப்பிட 'LOVE' என்கிற பதத்தைப் பயன்படுத்துகிறான். அதைப் போலவே மனைவிக்கும் கணவனுக்கும் இடையேயும் சகோதரர்களுக்கிடையேயும் இருக்கும உறவு, நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரிடையே காணப்படும் உறவு என எல்லாவற்றிற்கும் 'LOVE' என்ற வார்த்தையே உபயோகிக்கிறான். பிறப்பதற்கு முதல் யார் தாய்? யார் குழந்தை?

தாய்க்கும் குழந்தைக்கும், கணவனுக்கும் மனைவிக்கும் மற்றும் சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் இவர்களுக்கிடையேயெலலாம் இருக்கும்உறவுகள், பௌதிக உடலைச் சுற்றியமைந்தவை. இவை பௌதிக உடலைப் பொறுத்த உறவுகள் தானே தவிர, உண்மையில் இவற்றை அன்பெனக் கூறமுடியாது. அன்பிற்குக் கொடுப்பதும் கிடையாது; பிரதியாகப் பெறுவதும் கிடையாது. நவீன காலப் பக்தர்கள் "இறைவா! நீ மட்டும் என் ஆசைகளை நிறைவேற்றிவிட்டாய் என்றால் நான் உனக்குப் பத்துத் தேங்காய்கள் உடைக்கிறேன்!" என்கின்றனர். இன்னும் சிலர் தலை முடியைக் காணிக்கையாகத் தந்துவிட்டு, மிகுந்த பலன்களை எதிர்பார்க்கின்றனர். ஓர் உண்மையான பக்தன் கொடுக்க மட்டுமே செய்கிறான்; பிரதிபலனாக எதையும் எதிர்பார்ப்பதில்லை. சரணாகதிதான் உண்மையான பக்தியின் அடையாளம்.

### உலகியல்

மனித வாழ்க்கை என்பது இரண்டு வகையான அம்சங்களின் கலவை. ஒன்று தலை சம்பந்தப்பட்டது. அது பௌதிகமானது; உலகியலானது. மற்றொன்று இதயம் சம்பந்தப்பட்டது. அது ஆன்மீகமயமானது. ஆனால் மனிதனோ தலை நிறைய உலகியல் விடயங்களையே நிரப்பிக் கொண்டு அலைகிறானே தவிர, ஆன்மீக அம்சங்களையே மறந்துவிட்டான்.

இவ்வாறு உலகியலான விடயங்களுக்கே அவன் மதிப்புக்கொடுத்து வருவானாயின், அவனோ, அவன் சார்ந்திருக்கும் சமூகமோ, நாடோ எதுவுமே அமைதியாக இருக்க முடியாது; பாதுகாப்பாகவும் வாழ முடியாது.

இதயத்திலிருந்து வெளிப்படும் அன்பினைப் பிரதானமாகக்கொண்டு மனிதன் வாழும்போதுதான், இவ்வுலகில் அமைதியும், பத்திரத்தன்மையும் ஆட்சிபுரியும்!

### தர்மம்

இந்தப் படைப்பில் தர்மம்-அதர்மம், சத்தியம்-பொய்மை, புண்ணியம்-பாவம், வெப்பம்-குளிர்ச்சி என்கிற இரட்டை நிலைகள் இணைந்து தான் இருந்து வருகின்றன. மக்கள் இவ்வுலகில் இருந்து அதர்மத்தையே முழுமையாக அகற்றி விடவேண்டும் என விரும்புகின்றனர். தர்மம் மட்டுமே காணப்படவேண்டும் என நினைக்கின்றனர். இது சாத்தியமில்லை. இவ்வுலகில் தர்மம் நிலைக்க வேண்டுமெனில் அதர்மமும் இருந்தாக வேண்டும். அப்படியே அதர்மம் காணப்படும் போதுதான் தர்மமும் அங்கே வந்து தழைக்கிறது. இவ்வுலகே தர்மம், அதர்மம் ஆகியவற்றின் கூட்டிணைப்பே. இதில் ஏதாவது ஒன்று இல்லையென்றாலும் உலகம் இருக்க முடியாது. மனிதன் தனது விவேகத்தின் மூலம் தர்மம், அதர்மம் ஆகியவற்றை இனம் கண்டு தார்மீகமான வாழ்க்கை வாழ முயலவேண்டும்.

### அமைதி

மனிததர்மம் (ஒழுங்கு முறைகள்) மிருகதர்மத்தைவிட வேறானது. ஆனால் மனிதனால் இவற்றிடையேயிருக்கும் வித்தியாசங்களைக் கண்டுகொள்ள முடிவதில்லை. மனிததர்மம் என்பது சத்தியத்தின் தத்துவங்களையும், அகிம்சையையும், இரக்கத்தையும் சார்ந்து வாழ்வது. மிருககுணங்களைவிட வில்லையெனில் மனிதனுக்கு அமைதியும், பாதுகாப்பும் நிச்சயம் கிடையாது.

உணவு, உறக்கம், பயம், இனப்பெருக்கம் இவை நான்கும் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் பொதுவானவை. அவ்வாறெனில் மனித தர்மம் என்பது என்ன? நீ மனிதன் என எண்ணுவது பாதி உண்மை மட்டுமே. மற்றொரு பாதி உண்மை, நீ மிருகமல்ல என்று புரிந்து கொள்வதில்தான் தங்கியுள்ளது. நீ உனக்கு அடிக்கடி நினைவூட்டிக் கொள்ள வேண்டும் "நான் மனிதன், மிருகமல்ல!" என்று. அத்துடன் நிறுத்திக்கொள்ளாதே! இன்னும் உட்புறம் சென்று உன் தேடலைத் தொடங்கு. நீ எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன். ஆணா? பெண்ணா? உன் வாழ்க்கையில் எந்த நிலைககு வந்திருக்கிறாய்? நீ துறவியா? இல்லறத்தானா? எனக்கேட்டு, அந்தந்த நிலைக்கு உரிய தர்மத்தை அனுசரிக்க வேண்டும்.

நீ துறவியானால் இல்லறத்தானுடைய வாழ்க்கை வாழக்கூடாது. அந்த இல்லற தர்மத்தைப் பின்பற்றக் கூடாது. அவனது ஆச்சிரமத்துக்குத் தகுந்த தர்மத்தை மனிதன் பின்பற்றவில்லையெனில் தர்மம் தாழும்; நிலை குலையும்; அதனால் பற்பல துன்பங்களும், குழப்பங்களும் நிலவும்.

நான்கு ஆச்சிரமங்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை முறைகள் வெவ்வேறானவை; அவர்கள் எந்த ஆச்சிரம நிலையில் இருந்தாலும் தர்மம் என்பது பொதுவானதுதான் எனத் தவறாக நினைக்கத் தலைப்படாதீர்கள். தனது வயதிற்கோ, தானிருக்கும் வாழ்க்கை நிலைக்கோ ஒவ்வாத தர்மத்தை ஒருவன் பின்பற்றும் போது தான் அதர்மம் செய்கிறான் என்கிறோம். ஒவ்வொருவரும் தனது வாழ்க்கை நிலைக்கும், வயதிற்கும் ஏற்ற வகையிலான தர்மத்தை ஒட்டி அதன் படி வாழவேண்டும். ☆

**-தொகுப்பு: கரன்.**

---

## நீர்வேலி தெற்கில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்

அச்சுவேலி,ஜூலை5

கோப்பாய்ப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகம் நீர்வேலி தெற்கில் கிராம சேவகர் பணிமனைக்கு அருகில் செயற்படுகின்றது.

இந்த அலுவலகம் கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது. வாரத்தில் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் அலுவலகம் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை5

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு முன்னாள் அதிபர் க.சி.குகதாசன் தலைமையில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'சூழலோடு இயைந்த விவசாயம்' எனும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கு.மிகுந்தன் கருத்துரை வழங்கவுள்ளார். (க-10)

# பணத்தை அள்ளி வீசித் தமிழ் மக்களை விலைக்கு வாங்க கனவு காண்கிறது அரசு

## சிவமகாராசாவின் பாராட்டு விழாவில் மாவை

வலி.வடக்கு,ஜூலை5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பணத்தை அள்ளி வீசி வருகிறது அரசு. தமிழ் மக்களின் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டு பணத்துக்கு அவர்களை விலைக்கு வாங்கலாம் என்று அரசு கனவு காண்கிறது. இதற்குத் தமிழ் மக்கள் பலியாகி விடக்கூடாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா இப்படிக் கூறினார்.

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கூட்டுறவாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.சிவமகாராசாவின் சேவைநலன் பாராட்டு விழா மற்றும் கூட்டுறவுத் தீபம் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

சங்கத்தின் தலைவர் எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடந்த இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நாங்கள் இருவரும் ஒரே மண்ணைச் சேர்ந்தவர்கள் என்பதை விட தந்தை செல்வாவின் பாசறையில் மாணவர்களாகவும் இளைஞர்களாகவும் ஒன்றாக இணைந்து நாம் செயற்பட்டுள்ளோம். தற்போதும் கூட ஒரே இலக்குடன் தான் செயற்பட்டு வருகிறோம்.

ஒரே மனிதன் கூட்டுறவாளனாகவோ அரசியல்வாதியாகவோ மட்டும் இருந்துவிட்டால் போதாது. அவன் நாகரிகம் உள்ள மனிதனாகவும் நாகரிகம் உள்ள சமூகமாகவும், நாகரிகம் உள்ள நாடாகவும், உலகமாகவும் இருப்பதுடன் அவன் தன் சொந்தமண்ணில் சுதந்திரம் உள்ள மனிதனாகவும் இருத்தல் வேண்டும்.

### சிறையில் அடைப்பு

1970ஆம் ஆண்டில் எனது அரசியல் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. அதே ஆண்டில் கூட்டுறவுத் துறையிலும் மாற்றம் ஏற்பட்டது. சிறிமா அம்மையாரினால் மாற்றம் கொண்டு வரப்பட்ட காலத்தில் யாழ்.மாவட்டத்தில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் முன்மாதிரியாக கூட்டுறவுத் துறை உயர்ச்சி அடைந்து காணப்பட்டது.

இக்காலகட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு நாங்களும் தெரிவு செய்யப்பட்டோம். ஆனால் மூன்று மாதம் கூட இயங்கவிடாது அரசு என்னைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டது.

ஆனாலும் கூட 1978ஆம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமரர் அமிர்தலிங்கம், சிவமகாராசா அவர்களை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு பணிப்பாளராக நியமனம் செய்தார். அன்றிலிருந்து சிறந்த சேவையை மேற்கொண்டு வந்தமையால் இன்று அவர் பாராட்டப்படுகிறார்.

இன்று பொது வாழ்வுக்காக ஒருவன் முன்வருகிறான் என்றால் அவன் முன் பல்வேறு வகையான ஆபத்துக்கள் இருக்கின்றன. உயிராபத்துக்கூட காத்திருக்கிறது. அப்படி இருந்தும் கூட ஒருவர் பொது வாழ்க்கையில் ஈடுபட முன்வருகிறார் என்றால் அது அத்தகையவர்களின் உயர்ந்த பண்பையும் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வையுமே எடுத்துக் காட்டுகிறது.

### ராணுவத்தின் காலடியில் எமது சொந்தமண்

தமிழ் மக்கள் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ உரிமையுடையவர்கள். அது மட்டுமன்றி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்பதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் கூட எமது பூமியில் - எமது சொந்த மண்ணில் - மக்கள் வாழ அனுமதி மறுக்கப்பட்டு இராணுவத்தின் காலடியில் கிடக்கிறது.

இந்த அரசு எம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்காமலும் எம் மக்களுக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமலும் இழுத்தடித்துக் கொண்டு அதே கால கட்டத்தில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் ஆயுதங்களை வாங்கிக் குவித்து எம்மை அழித் தொழிக்கும் நடவடிக்கையையே மேற்கொண்டு வருகிறது.

அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நானும் நண்பர் சிவமகாராசாவும் கையொப்பமிட்டுள்ளோம்.

எமக்கு என்ன நடக்கும் என்று தெரியாது. ஆனாலும் கூட எதற்கும் முகம் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றோம் என்றார்.

இந்த நிகழ்வில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் துவைத்திலிங்கம், வலி.வடக்குப் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல், வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாஸ்கரன் உட்பட பலரும் உரையாற்றினார்கள். (க-86)



தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படங்கள்.
புளொட் அமைப்பைச் சேர்ந்த சாவகச்சேரி நகரசபைத் தலைவர் பெனடிக்ற் தனபாலசிங்கம், யாழ்.மாநகர சபை மேயர் ந.ரவிராஜ், ரெலோ அமைப்பைச் சேர்ந்த சிவம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.
ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அமர்ந்துள்ளனர்.
படையினரின் பாலியல் வல்லுறவுக் கொடூரங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை நடத்தப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பாக இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கப்பட்டது. (படங்கள்: ரோய் மதிவதனன்)

# மனதார நன்றிகூறி வாழ்த்துகின்றோம்

யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் அடிப்படைத் தேவைகளை மிக அக்கறையுடன் கேட்டறிந்து அவற்றுள் முதன்மையான மூன்றுமாடிக் கட்டடத்தின் முதற் கட்டடத் தொகுதித் தேவைக்கு ரூபா பதினைந்து லட்சத்தினை உடனடியாக ஒதுக்கித்தந்து அதற்கான உடனடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டமைக்காக



**கௌரவ அமைச்சர்**

**கே.என்.டக்ளஸ தேவானந்தா**

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இதற்கான உரையாடலின் போது உடனிருந்து ஆலோசனை வழங்கிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான

**திரு.எஸ்.தவராசா**

**திரு.கே.வி.குகேந்திரன் (குகன்)** மற்றும்

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத் தலைவருமான

**க.மணிபல்லவராஜன் (நிசாந்தன்)**

ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது பாடசாலையின் நிலைப்பாட்டினைத் தெளிவாக அமைச்சருக்கு விளங்கவைத்த வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைவர்

**திரு.பூ.குணசிங்கம்**

**உப தலைவர் யு.எல்.ஏ.ரவி**

அவர்களுக்கும், எமது பாடசாலைச் சமூகம் என்றென்றும் நன்றியுடையதாக இருக்கின்றது.

இவர்கள் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பா.அ.ச., ப.மா.ச.

(C/17300)

**யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்**

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 30 - 08 - 1966

உதிர்வு 08 - 07 - 1999

## அமரர் இராஜரட்ணம் ஜெயக்குமார்

திதி:- 05-07-2001

எம் அன்புச் செல்வமே!
ஈராண்டு கழிந்தாலும் ஆறவில்லை எம் சோகம்!
இன்னும் மாறவில்லை எம் வேதனை!
எம்மைக் கண்ணீரில் தவிக்கவிட்டு
கடவுளிடம் சேர்ந்த மாயம்தான் என்ன?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தந்தை, தாய், சகோதரர், மனைவி, பிள்ளைகள்.**

க.இராஜரட்ணம்,
*44, புகையிரத வீதி,*
*கந்தர்மடம்.*

(C/17291)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் நடேசர்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட, திருமதி சிவபாக்கியம் நடேசர் 03-07-01 செவ்வாய்க்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நடேசர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற மதியாபரணம், திருமதி செல்லம்மா(மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஞானசுந்தரம்(அமெரிக்கா), சிவகாம்பிகை(சுதுமலை), சிவயோகசுந்தரம்(கொழும்பு), கமலாம்பிகை(கொழும்பு), இராஜேஸ்வரி (கொழும்பு), சிவராஜசுந்தரம்(அபுதாபி) ஆகியோரின் அன்புத் தாயாரும், லஷ்மி, பாலேந்திரன், எஸ்தர், உருத்திரமூர்த்தி, மைதிலி ஆகியோரின் அன்பு மாமியும், சிவசுரேஸ், சுரேசினி, நரேன், குமரன்(யா/பரியோவான் கல்லூரி), நந்தன்(யா/பரியோவான் கல்லூரி), முகுந்தன், புவனி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பா.சிவகாம்பிகை
(மகள்)

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(89757)

## குடும்பப் பெண் கிணற்றில் வீழ்ந்து மரணம்

ஆழக் கிணற்றில் வீழ்ந்து பலியான இளம் குடும்பப் பெண்ணின் சடலம் கடந்த திங்களன்று இரவு மந்திகை ஆஸ்பத்திரியில் நெல்லியடிப் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி அத்தாய் என்னும் இடத்தைச் சேர்ந்த தவராசா மல்லிகாதேவி (வயது 26) என்னும் மூன்று பிள்ளைகளின் தாயாரே மரணமானவர் ஆவார்.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார். வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியன் மரண விசாரணைகளை நடத்தினார்.

இப் பெண்ணின் கணவர் தற்போது தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## ஒத்திவைப்பு

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு நடத்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்கைநெறி தொகுதி 3 இன் நிறைவு நாளும சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

ஏற்கனவே அறிவித்தபடி எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறமாட்டாதென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (க)

# யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**165ஆவது ஆண்டு நிறைவு, பரிசுத்தினம் மெமோறியல் மலர் 6 வெளியீட்டுவிழா**

*காலம்:-* இன்று (05.07.2001) வியாழக்கிழமை பிற்பகல் 1.45 மணி
*இடம்:-* கல்லூரி திறந்த வெளியரங்கு
*தலைவர்:-* திரு.அ.மு.அருணாசலம் *(அதிபர்)*

***பரிசுத்தினம்***

*முதன்மை விருந்தினர்*
**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*(துணைவேந்தர் - யாழ்.பல்கலைக்கழகம்)*

*பரிசில் வழங்குபவர்:-*
**திருமதி இராஜலக்சுமி பாலசுந்தரம்பிள்ளை**

**மலர் வெளியீடு**

*முதன்மை விருந்தினர்:*
**கலாநிதி சு.நா.தணிகாசலம்பிள்ளை**

*விசேட விருந்தினர்*
**மாண்புமிகு கு.வே.குகேந்திரன்** *நாடாளுமன்ற உறுப்பினர்*

*சிறப்பு விருந்தினர்கள்*
**திருமதி றெ.இருதயநாதன்** *(பிரதிக்கல்விப் பணிப்பாளர்)*
**திரு.க.தனபாலசிங்கம்.** *(உதவிக்கல்விப் பணிப்பாளர்)*
**திரு.வெ.அ.ஜோன்சன்** *(பிரதேச சபைத் தலைவர்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**அதிபர், ஆசிரியர்கள்,**
**பழைய மாணவர், பெற்றோர்.**

(89759)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் துணை

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள் இன்று (05.07.2001) வியாழக்கிழமை காலை 11.00 மணிமுதல் 11.55 மணிவரையுள்ள சித்தயோகம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

**எமது சிரேஷ்ட புத்திரி**

**செல்வி குணேந்திரன் மயூரி** அவர்களுக்கு

பூப்புப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

601, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி குணேந்திரன் குடும்பத்தினர்,
திரு.திருமதி சரவணமுத்து கந்தசாமிப்பத்தர் (பேரன்)

(89712)

# நினைவஞ்சலி

**முதலாம் ஆண்டு** **இரண்டாம் ஆண்டு**



**வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**

இறப்பு:16-06-2000



**சின்னத்தம்பி சாவத்திரி**

இறப்பு: 20-11-1999

பூமியின் வயிற்றினிலே
உதித்த தெய்வங்களே!
ஏக்கத்தின் வாசலில்
எங்களை விட்டுவிட்டு
எங்கு சென்றுவிட்டீர்கள்?

மண்ணகை வாழ்வு போதுமென்றா
விண்ணகம் சென்றீர் ஓய்வு பெற?
அன்பெனும் விதையை
எங்களுள் தூவிவிட்டு
அவசரமாய் சென்றாலும்
எங்களின் மனம் உங்களை
மறவாது!

ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
ஆறாத நம் நெஞ்சம்
மீண்டு நீங்கள் வரும்வரை
காத்துக் கிடக்கும் கனவுகளுடன்!

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**
-அல்லாரை-

தகவல்:
சண்முகநாதன்
குடும்பம்.
(சுவிஸ்)

(89728)

## தமிழ்மொழித் தினத்தை முன்னிட்டு

# மாகாண மட்டத்தில் நடந்த எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாகாண மட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ்மொழித் தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர், விவரம் வருமாறு:

### 1 பிரிவு
### ஆக்கம், எழுத்து

முதலாமிடம்— முத்துக்குமார் மெடோன் ஆன்சியா (யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தி.), இரண்டாமிடம்—ஜெ. நிலுஷினி (மட்டு. கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தி), மூன்றாமிடம்—த. நிலாஜினி (திருமலை பேராறு பரமேஸ்வரா வித்தி.),

### பிரிவு 2
### கட்டுரை/கடிதம்

முதலாமிடம் — சிவலிங்கம் தாட்சாயினி (முல்லைத்தீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி.), இரண்டாமிடம்—ரமேஸ் பிரசாந்தி (வவுனியா சைவப் பிரகாச மகளிர் வித்தி.), மூன்றாமிடம்—க. மாதங்கி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி),

### பிரிவு 3
### கட்டுரை/கடிதம்

முதலாமிடம் — ஸ்ரீவரதன் சுகிர்தா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்—மா. சரண்ராஜ் (மன்னார் சித்திவிநாயகர் இ. தே. பாடசாலை), மூன்றாமிடம்— அ. த. பாத்திமா பொபினாஸ் (அக்கரைப்பற்று அல்-இல்யாஸ் வித்தி.),

### பிரிவு 4-கட்டுரை
### கவிதை நயத்தல்

முதலாமிடம்—சி. சாலினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்— உ. உசவர்த்தனி (திருமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), மூன்றாமிடம்—ரீ. சித்திக் (ஓட்டமாவடி தே. பாடசாலை),

### பிரிவு 5-கட்டுரை
### திறனாய்வு உரைநடை

முதலாமிடம் — எம். எம். சர்ஹறன் (அக்கரைப்பற்று மு. ம. கல்லூரி), இரண்டாமிடம்—க. நிரோஜினி (மண்டூர் ம. வி.), மூன்றாமிடம்— க. சிவதாரணி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை),

### குறுநாடகம்

முதலாமிடம் — அன்ரன் செல்வக்குமார் விபீடா (யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்), இரண்டாமிடம் அ. கவீந்திரன் (கல்முனை சி. சி. மி. மத்திய வித்தி.), மூன்றாமிடம் — பூ. புனிதகரன் (மட்டு. குருமன்வெளி சிவசக்தி ம.வி.),

### பிரிவு 4- கவிதை

முதலாமிடம் — எமிடா (மன்னார் புனிதசவேரியார் பெ. தே. பாடசாலை), இரண்டாமிடம்— ஆ. மதுரா (வயாவிளான் மத்திய ம. வி.), மூன்றாமிடம் — சு. சியாமளா (வவுனியா சைவப் பிரகாச மகளிர் வித்தி.),

### பிரிவு 5- கவிதை

முதலாமிடம் — தெட்சணாமூர்த்தி அகிலன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி). இரண்டாமிடம் — க. கோகுலதாஸ் (வவுனியா தமிழ் ம. வி.), மூன்றாமிடம் — கு. மு. பாலயீத்கான் (திருமலை அல் — தாரிக் ம.வி.).

### பிரிவு 4- சிறுகதை

முதலாமிடம் — ஸ்ரீதரன் அம்பிகா (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் — கு. சிவசங்கரி (திருமலை செல்வநாயகபுரம் த. ம. வித்தி.), மூன்றாமிடம் — மு. ஹ. ஹுசினியா (மட்டு. மீரா பாலிகா ம. வி.),

### பிரிவு 5- சிறுகதை

முதலாமிடம் — இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா (யாழ். இந்துக்கல்லூரி), இரண்டாமிடம் — சுரேகா தவராஜா (பூநகரி ம. வி.), மூன்றாமிடம் — ஜனனி ஜெரோம் (திருமலை புனித மரியாள் கல்லூரி)

(க-10)

## சங்கரத்தை இந்துவாலிபர் சங்க பவளவிழா

வலி. தென்மேற்கு, ஜூலை 5

வட்டு — சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பவளவிழா நிகழ்வுகள் (1926—2001) எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் சங்கரத்தை திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

முதல்நாள் நிகழ்வுக்கு வலி. மேற்கு பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா பிரதம விருந்தினராகவும், பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பிப்பர்.

அன்றைய தினம் பவள விழா சிறப்புமலர் வெளியீட்டு விழாவும் இடம் பெறும். வெளியீட்டுரையை தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தியும் — ஆய்வுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும், பதிலுரையை மலர் ஆசிரியர் சோசி ஆதவனும் ஆற்றவுள்ளனர். முதற் பிரதியை சங்கரத்தைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா. ஜெயரஞ்சிதன் பெற்றுக்கொள்வார்.

தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி பொருளியல் விரிவுரையாளர் அ. குமாரவேல் தலைமையிலான பட்டிமன்றமும், "அருந்ததையின் இருக்கு" எனும் நிருத்திய நாடகமும் இடம்பெறும்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக் கிழமை பகல் நடைபெறும் நிகழ்வுகளுக்கு வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோசநாதன் பிரதம விருந்தினராகவும், ஓய்வுபெற்ற பிரதேச செயலர் கா. சந்திரராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

அன்றைய தினம் செல்வி த. சிறிகௌசிகாவின் மயில் நடனமும் — "நாளை நமதே" கவியரங்கமும் — அரியாலை பூர் சந்திரகுமாரின் தயாரிப்பில் உருவான "கண்டறியாத கல்யாணம்" நகைச்சுவை நாடகமும் இடம்பெறும்.

(க-185)

## முழுநிலா நாள் கலை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 5

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கலைநிகழ்வு இன்று பிற்பகல் 3-30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச. சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவுப் பகுதிக்கான கலாசார உத்தியோகத்தர் கலந்துகொள்வார்.

இலக்கியப் பேருரை, நடனம், சிறுவர் அரங்கம், கவியரங்கம் என்பனவும் இடம்பெறும். ஐ. மயில்வாகனம் கவியரங்குக்குத் தலைமை வகிப்பார்.

(ம-7)

# மாநகர சபைக்கு நிதி ஒதுக்குவதில் அமைச்சு பாரபட்சம் காட்டுவது ஏன்?

## மேயர் ரவிராஜ் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 5

வடக்கின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைக்கு வெளிநாடுகளிலிருந்து ஆயிரத்து 800 கோடி ரூபா நிதி உதவி கிடைத்துள்ள போதிலும் யாழ். மாநகர சபைக்கு நிதி ஒதுக்கித் தருவதற்கு அமைச்சு ஏன் பின்னடிக்கிறது?

— இவ்வாறு யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் உதயனுக்குத் தெரிவிக்கையில் கூறியதாவது:

யாழ். மாநகர சபைக்கான நிதி ஒதுக்கீட்டு விவகாரத்தில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பல தடவைகள் தொடர்பு கொள்ள முயன்றும் தொடர்புகள் கிடைக்கவில்லை.

தற்பொழுது 'றான்' நிறுவனத்தின் தலைவருக்கு இது தொடர்பாகக் கடிதம் எழுதியுள்ளேன். இதற்கும் சரியான பதில் கிடைக்காதுவிட்டால் ஜனாதிபதிக்கும் அமைச்சுக்கு நிதிஉதவிகளைவழங்கும்வெளிநாடுகளின் தூதரகங்களுக்கும் இந்த விவகாரத்தை அம்பலப்படுத்தத் திட்டமிட்டுள்ளேன்.

இரண்டாயிரத்தொராம் ஆண்டுக்கான மதிப்பீட்டுத் திட்டத்தை இரண்டாயிரம் ஆண்டு டிசம்பரிலேயே சமர்ப்பித்து விட்டோம். ஆனால் ஆறு மாதகாலமாகியும் இந்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகத் தெரியவில்லை.

மாநகர சபையின் 2001ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களுக்கு 6 கோடி 60 லட்சம் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டுத் திட்டங்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டு விட்டன.

தற்பொழுது 80 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். நவீன சந்தைக் கட்டடத் தொகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலும் ஒரு கோடி ரூபா தேவை— ஆனால் அதற்கான நிதி இதுவரை கிடைக்கவில்லை. இப்படி அவர் மேலும் கூறினார். (ம-5)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலய தீர்த்தோற்சவம் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும்.

எம்பெருமான் வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து தீர்த்தமாடுவதற்காக திருவீதியுலா எழுந்தருளி பவனி வருவார். (க)

★ ★ ★

புரியங்கூடல், இந்தன் முத்து விநாயகர் ஆலய மண்டலாபிஷேகமும் அலங்கார உற்சவமும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

48 தினங்கள் நடைபெற உள்ள அலங்கார உற்சவத்தில் "விநாயகர் புராணம்" எனும் பொருளில் யாழ். பல்கலைக்கழக மாணவர் நா. கலாதரசர்மா சொற்பொழிவாற்றி வருகின்றார்.

(க-10)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ சர்வமங்கள இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பௌர்ணமிதின விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று சுவாமி வீதி உலாவும் நடைபெற உள்ளது. (க-9)

★ ★ ★

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-17)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று புதன்கிழமை விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகியது.

இந்தத் திருவிழா தொடர்ந்து 15 தினங்கள், தினமும் பிற்பகல் 3. 30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி சுவாமி உள்வீதி உலா வருதல் இடம்பெறும்.

(க-17)

## கப்பல் பயணிகள் கொழும்பில் 'ரிக்கெட்' பெறும் நடைமுறை

கொழும்பு, ஜூலை 5

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ" கப்பலில் பயணம் செய்வதற்குக் கொழும்பில் பயண அனுமதி, பயணச்சீட்டு ஆகியவற்றைப் பெறுவதற்கான நடைமுறைகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நடைமுறைகள் வருமாறு:

★ பயணம் செய்யும் திகதிக்கு இரு வாரங்களுக்கு முன்பதாக நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நீங்கள் தங்கியிருக்கும் பகுதியிலுள்ள பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் 3பிரதிகள் கொண்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவேண்டும்.

★ சகல பொலீஸ்நிலையங்களிலும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ இந்த விண்ணப்பம் பாதுகாப்பு அமைச்சுக்கு 48 மணித்தியாலத்திற்குள் அனுப்பி வைக்கப்பட்டுத் தகவல் உறுதிப்படுத்தப்படும்.

★ பாதுகாப்பு அமைச்சால் அனுமதி வழங்கப்பட்ட பயணிகளின் பெயர் விவரங்கள், கப்பல் சேவையை நடத்தும் நிறுவனம், திருகோணமலைப் பிரதேச செயலர் ஆகியோருக்குரிய பிரதிகளுடன் கடற்படைத் தளபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ பாதுகாப்பு அமைச்சின் அனுமதிபெற்ற பயணிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல் நேச்சர் லங்கா ட்ரவல்ஸ் அன் ரூவர்ஸ் (பிரை) லிமிட்டெட், யுனிக்கோர்ன் ஓவர்சீஸ் சேர்விஸஸ் (பிரை) லிமிட்டெட் ஆகிய பயணச்சீட்டு முகவர் காரியாலயங்களின் அறிவித்தல் பலகையில் ஒவ்வொரு நாளும் பார்வைக்கு வைக்கப்படும்.

(ம-3-9)

## கொக்குவில் பெண் படுகொலை; பொலீஸாரால் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 5

கொக்குவில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த செல்வராசா யோகராசா என்பவரே இச் சம்பவம் தொடர்பாகக்கைதுசெய்யப்பட்டவராவார். இவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் இ. த. விக்னராஜா உத்தரவிட்டார்.

பொலீஸார் தன்னைத் தாக்கியதினால் தனக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும்— எலும்புகள் முறிந்துள்ளதாகவும்—

சந்தேக நபர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இந்தச் சந்தேக நபரைச் சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் முற்படுத்தி வைத்திய நிபுணரின் ஆலோசனையுடன் சிகிச்சையளிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு பணிப்புரை விடுத்த நீதிவான் கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலைப் புதைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை —

கொலை செய்யப்பட்ட பெண் தொடர்பான சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையும் நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் உடலில் பாலியல் வல்லுறவுக்கான தடயங்கள் எதுவும் இல்லை என்று இந்த மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## கடற்படை மூலம் கடல் வழியாக எங்களை இந்தியா அனுப்புங்கள்

### யாழ். சிறையில் உள்ள மீனவர் கோரிக்கை

சிறிலங்கா கடற்படையினரிடம் ஒப்படைத்து கடல் வழியாகவே தங்களை இந்தியாவுக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். சிறைச்சாலையில் கடந்த பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 இந்திய மீனவர்களும் நேற்று யாழ். நீதிவானிடம் வேண்டினார்கள்.

மேற்படி 50 இந்திய மீனவர்களும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அப்போதே அவர்கள் மேற்கண்டவாறு கோரினர்.

கடற்படையினரே எம்மைக் கைது செய்தனர். எனவே அவர்களிடமே எம்மை ஒப்படைத்து கடல் மூலம் தாயகம் திருப்புவதற்கு ஒழுங்கு செய்யுமாறும் அவர்கள் நீதிபதியிடம் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த நீதிபதி தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர் விவகாரம் இரண்டு அரசுகள் சம்பந்தப்பட்ட விடயம். மீன்பிடித் துறை அமைச்சர் உங்களது விடயம் தொடர்பாக இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளார். சட்டமா அதிபரின் பணிப்பின் பேரிலேயே உங்களை நீதிமன்றத்தால் விடுதலை செய்ய முடியும் — என்றார். (ம-5



நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவத்துக்காக குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நயினாதீவுக்குப் படையெடுத்துச் செல்கின்றனர்.

தேர்த் திருவிழாவுக்காக நயினை செல்லத் திரண்டிருந்த பெரும் எண்ணிக்கையான பக்தர்களையே படத்தில் காண்கிறீர்கள்.

யாழ்.பஸ்நிலையப்பகுதியில் நீண்ட வரிசையில் திரண்டிருந்த பக்தர்கள் படையினரின் சோதனைகளை முடித்துக்கொண்டு பஸ்ஸில் ஏறிச் செல்லும் காட்சி.

*(படங்கள்: றோய் மதிவதனன்)*

## மின்தறி ஆலையை புனரமைத்து இயக்க முடிவு

சண்டிலிப்பாய்,ஜுலை5

நீண்டகாலமாகச் செயற்படாத நிலையில் உள்ள சங்கானை ப.நோ. கூ.சங்கத்தின் மின்தறி ஆலையைப் புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்வதென்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நிதி உதவியை வழங்கி உதவுமாறு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்திடம் வேண்டுகோள் விடுப்பது என்று சங்கப் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது என சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் தெரிவித்தார். (க-135)

# ஜனாதிபதி அழைத்த கூட்டத்திற்கு வராத பிரதி அமைச்சர், மூன்று எம்.பிக்கள்!

## நால்வரிடமும் விளக்கம் கோரப்படுகிறது

கொழும்பு,ஜுலை5

கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பாடு செய்த கூட்டத்தில் பங்குபற்றாத ஒரு பிரதி அமைச்சர் உட்பட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் டயஸ் அழகப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆனந்த முனசிங்க, பாரத லஷ்மன்பிரேமச்சந்திர, கீர்த்தி மாவல்லாகே ஆகியோர் பங்குபற்றவில்லை.

பிரஸ்தாப நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடும் என்று அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில்-

பிரஸ்தாப நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க விளக்கம் கோரியுள்ளார்.

இரு பிரதி அமைச்சர்கள் உட்பட நான்கு அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க முன்வந்துள்ளதாக ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-3)

## கோப்பாய் இளைஞரை காணவில்லை

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் தெற்கு, டச்சு றோட்டைச் சேர்ந்த பொன்னன் உதயகுமார் (வயது 20) என்பவரே காணாமற் போனவராவார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்ட இவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## பொதுக் கிணறு புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஜுலை5

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் பனிப்புலம் கிராமத்தில் பொதுக் கிணறு ஒன்று புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ள இப் பொதுக்கிணறு மூலம் இப்பகுதி மக்கள் நல்ல குடிதண்ணீரைப் பெற வசதிஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-135)

## நிவாரண விநியோகம்

தென்மராட்சி,ஜுலை5

இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜுன் மாதத்திற்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் கிளைக் கடைகளில் விநியோகிக்கப்பட்டு வருவதாக சங்கப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (க-117)

# மட்டக்களப்பில் மின்வெட்டு

மட்டக்களப்பு,ஜுலை5

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு கட்டங்களாகக் கடந்த திங்கள் முதல் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை பிரதம பொறியியலாளர் கே.பரம்சோதி தெரிவித்துள்ளார்.

ஹபரணை ஊடாக வழங்கப்படும் லக்சபானா மின்சாரத்தைப் பெறும் வாழைச்சேனை ஓட்டமாவடி தொடக்கம் மட்டக்களப்பு நகரம் வரையான பிரதேசங்களில் மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணி வரையும் -

இங்கினியாகல மின்சாரம் பெறும் பெரிய கல்லாறு முதல் மட்டக்களப்பு நகர புளியந்தீவு வரையான பிரதேசங்களில் இரவு 9.45 மணிமுதல் 11.15 மணிவரை இம் மின்வெட்டு நடைமுறையில் இருக்குமென்று அவர் மேலும் தெரிவித்தார். (க)

## கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜுலை5

கடந்த 27ஆம் திகதி புத்தூர் பகுதியில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை இ. உதயகுமார் என்பவர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டதை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமான செயல் இது என்று அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

**A/L 2002** (முதலாம் வருட மீட்டல் வகுப்பு)

அளவையியல் - சயந்தன்

பகுதி – II

ஆரம்பம்:- 07-07-2001 (சனி 3 மணி)

ருதிரா உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (89777)

**UNIVERSITY OF JAFFNA SRILANKA**

UNIVERSITY ADMISSION

ACADEMIC YEAR - 2001/2002

A list of names of students who were selected for admission to the University of Jaffna for the above academic year has been received from University Grants Commission and has been displayed on all Notice Boards of the Faculties.

Another list of 35 students has also been received from UGC whose admissions were not finalised. In this regard these students are requisted to contact the UGC and finalise their admission and obtain letter of admission to do the registration.

Application form for admission will be sent individually by post to all selected students. The students are requested to get the registration done before 15th August,2001, Failing which action will be taken to fill the vacancies without delay.

Registrar (C/17305)

# கடமைப் பட்டியலின் பிரகாரம் உள்ளூராட்சி உதவியாளர் பணிபுரிவர்

## அமைச்சுச் செயலாளர் பணிப்புரை

யாழ்ப்பாணம்,ஜுலை5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களைக் கடமைப் பட்டியலின் பிரகாரம் பணியாற்ற அனுமதிக்குமாறு மாகாணப் பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு, வீதி அபிவிருத்தி அமைச்சுச் செயலர் க.பரமலிங்கம் பணித்துள்ளார்.

அரசாங்கத்தின் முன்னுரிமைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவென மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சினால் கடந்த 1999 ஆண்டு மே மாதம் முதல் உள்ளூராட்சி நிறுவனங்களில் விசேட ஆளணியாக 66 பட்டதாரிகள் உள்ளூராட்சி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டு ஒரு வருடம் முடிவடைந்துள்ளது. ஆனால் கடமைப் பட்டியல் பிரகாரம், உள்ளூராட்சி நிறுவனங்களான பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இதனையடுத்து மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் க.பரமலிங்கத்தினால் மேற்படி பணிப்புரை வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது. (ம-185)

## பளை மத்திய கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜுலை5

பளை மத்திய கல்லூரியில் கல்வி கற்றுத் தற்பொழுது வேறு பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்ற இந்த ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் -

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் (2003) கணித, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களும் மற்றும் தரம் 9இல் கல்வி கற்கும் மாணவர்களும் -

எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் காலை 9மணி தொடக்கம் 12மணி வரையும், தற்பொழுது கல்லூரி இயங்கும் புலோலி றோ.க.த.க. பாடசாலைக்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதிபர் கே.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (க-10)

## முக்கிய அறிவித்தல்

**சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்**

**யாழ்ப்பாணம்.**

அன்புடையீர்!

இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட இருக்கும் இந்துமத குருமார்களுக்கான விஷேட அடையாள அட்டை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து இறுதித் திகதியாக எதிர்வரும் (15.07.2001) ஞாயிற்றுக்கிழமைக்கு முன் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகிறேன்.

*முக்கிய குறிப்பு:*

☆ எமது தலைமைக் காரியாலயத்தில் இதுவரை படிவங்களை ஒப்படைத்த விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் (08.07.2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1 மணி தொடக்கம் மாலை 4 மணிக்குள் தவறாது சமுகம் தரும்படியும்,

☆ வடமராட்சிக் கிளையில் படிவங்களை ஒப்படைத்த விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் (09.07.2001) திங்கட்கிழமை பி.ப.1 மணி தொடக்கம் 4 மணிக்குள் கிளைத் தலைவரின் (சிவன்கோயில், வல்வெட்டித்துறை) இல்லத்துக்குத் தவறாது சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

தலைமைக் காரியாலயம்,
*இல.74, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

**பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா**
பொதுச்செயலாளர்.

(89773)

## விவாக சோபன முகூர்த்த பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வதி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 22ஆம் நாள் நாளை (06.07.2001) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி தொடக்கம் 12.34 மணி வரையுள்ள சித்தயோகமும் பிரதமைத் திதியும் பூராட நட்சத்திரமும் பொருந்திய கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

**எங்கள் துவிதிய புத்திரன்**
**சிரஞ்சீவி**
ஸ்ரீகாந்தசர்மாவிற்கு



**எங்கள் கனிஷ்ட புத்திரி**
**சௌபாக்கியவதி**
மகாலட்சுமியை

மணமகள் இல்லத்தில் கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய, கரணவாய் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானதும், வேலம்பிராய் அம்பாள் திருவருள் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்றுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

☆ **சமாவர்த்தனம் - மணமகன் இல்லத்தில் காலை 8 மணி**

☆ **வதூவரகிரகப் பிரவேசம் - மணமகன் இல்லத்தில் மாலை 4 மணி**

தங்கள் நல்வரவை நாடும்:

**பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாத சர்மாவும் பாரியாரும்.**
இல.66,நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

**பிரம்மஸ்ரீ க.சச்சிதானந்தக் குருக்கள் குடும்பத்தினர்**
இல.435, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

*(இரு வீட்டார் அழைப்பு)* (89774)

## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி அருட்செல்வவிநாயகம்

(துன்னாலை தெற்கு, வெல்லிகந்ததோட்டப் பிள்ளையார் கோயில் நிரந்தர தர்மகர்த்தா)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி அருட்செல்வவிநாயகம் 04.07.2001 புதனன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருட்செல்வவிநாயகத்தின் (முன்னாள் முகாமையாளர், வெல்லிகந்த தோட்டப் பிள்ளையார் கோயில்) அன்பு மனைவியும், திருமதி அருளேஸ்வரி, திருமதி திலகேஸ்வரி அருளானந்தம் (கனடா), திருமதி அமிர்தகுணபாஞ்சாலி (தே.வீ.அ.சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சண்முகராசா, இராஜகுலசிங்கம், பொன்ராணி (கனடா), காலஞ்சென்ற பாலசுந்தரராஜா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.07.2001) புதன்கிழமை பிற்பகல் நடைபெற்றுப் பூதவுடல் ஓடைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (89775)

தகவல்:
திருமதி பா.பாஞ்சாலி (மகள்)

# புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் விடைகள்

நேற்று முன்தினம் உதயனில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.2 இற்குரிய விடைகள் வருமாறு:-

பகுதி I

(1) காய் (2) வாக்கியம் (3) புதன்
(4) அன்பு (5) Cat (6) 1 (7) 1
(8) 2 (9) 2 (10) 3 (11) 1
(12) C (13) D (14) C (15) B
(16) A (17) 1 (18) 2 (19) 1
(20) 2 (21) 3 (22) 3 (23) அ
(24) இ (25) ஈ (26) IV (27) II
(28) I (29) V (30) III (31) 3
(32) 4 (33) 3 (34) 1 (35) 3
(36) 2 (37) 1 (38) 3 (39) 2
(40) 3

பகுதி 2

(1) பட்சணம்
(2) பூப்பறித்தனர். பூரதம் கட்டினர்.
(3) வீடுகள் கட்டி விருந்துகள் செய்வர்.
(4) பிள்ளை தாயைப் பார்த்து
(5) நல்லவர்கள். (6) மலர்.
(7) சிற்றுண்டி. (8) வண்டு
(9) பகைவர்
(10) தந்து + அனுப்பு
(11) நாங்கள/நாம்
(12) அம்மாமார்.
(13) அம்மா (14) வீடுகள்
(15) போகிறேன்/போகின்றேன்
(16) HAND (17) I (18) HOUSES
(19) TREE
(20) கிராமியப் பாடல்கள்.
(21) தாள வாத்தியங்கள்
(22) பாட்டு வாத்தியங்கள்
(23) பல்லியம் (24) வாத்திய இசை
(25) C (26) B (27) E (28) A
(29) D (30) 30பேர் (31) 5பேர்
(32) 5பேர் (33) 65 (34) 130 ரூபா
(35) இரண்டு ரூபாக் குற்றி ஒன்றும், ஐம்பது சதக் குற்றிகள் நான்கும்; அல்லது ஒரு ரூபாக் குற்றிகள் மூன்றும் ஐம்பது சதக் குற்றிகள் இரண்டும்; அல்லது ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐம்பது சதக் குற்றிகளில் ஒவ்வொன்றும் 25 சதக் குற்றிகள் இரண்டும். (36) சுவாலை சிறிதாக அணையும்
(37) ஒட்சிசன்
(38) வெப்பசக்தி, வெளிச்சசக்தி
(39) செயற்கை ஒளிமுதல்
(40) IX (41) VII (42) XXIV
(43) வயிற்றுளைவு/வாந்திபேதி
(44) வயிற்றுளைவு/நெருப்புக்காய்ச்சல்/வாந்திபேதி.
(45) நீர்வெறுப்பு நோய்
(46) மலேரியா/யானைக்கால்
(47) பிளேக் (48) ஆணி, கம்பித்துண்டு, தகரமூடி, தடி, வெற்றுப்பேணி, காட்போட்.
(49) பச்சை (50) சுயசரிதை
(51) குளோரின் (52) விற்றமின் D
(53) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்
(54) ✓ (55) ✗ (56) ✓ (57) ✓
(58) ✗ (59) பாலவாசன்
60) வளர்மதி வீதி ,
மட்டுவில் தெற்கு ,
சாவகச்சேரி
இப்படிக்கு ,
அன்புமகன் .
பா.அருணிகன் .
(61) தரம் (62) கடிதம்
(63) பாடசாலை (64) அப்பா
(65) முன்னால் பாதசாரிகள் கடவை
(66) நஞ்சு
(67) முன்னால் சிறுவர் கடவை
(68) வைத்தியசாலை
(69) 20ரூபா (70) 12ரூபா
(71) 60ரூபா (72) 15ரூபா
(73) 3ரூபா (74) 875ரூபா
(75-80) பொருத்தமான வசனங்கள்.

## திருப்பணி

நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் கோயில் மணிக்கூட்டுக் கோபுர புனருத்தாரண திருப்பணிகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பொறியியலாளர் கே.பூரணச்சந்திரனால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். (ஒ)


A/L 2003
உயிரிப் பல்வகைமை
(BIODIVERSITY)
ஆரம்பம் - 05.07.2001
பி.பகல் 5 மணி
திரு.M.M.அல்போன்ஸ்
கையேட்டுப் பிரதி வழங்கப்படும்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


## காணிக் கொள்வனவு

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் நிர்வாகப் பிரிவுக் கட்டடம் அமைப்பதற்கென ஏழரை லட்சம் ரூபா செலவில் பொதுமக்கள் 7 பரப்புக் காணியைப் பெற்று வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களிடம் இருந்து நிதியைச் சேகரித்திருந்தது. (க-11)

## முரண்பாடுதீர்த்தல் கருத்தரங்கு

தென்மராட்சி,ஜுலை5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான முரண்பாடுகள் தீர்த்தல் கல்விக் கருத்தரங்குகள் இன்றும் எதிர்வரும் 8 ஆம திகதியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென அறி விக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட மாணவத் தலைவர்களைக் கட்டாயம் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

# நஞ்சு ஊட்டி இளைஞரை படுகொலை செய்வதற்கு முயற்சி

## கெற்பேலியில் இருள் சூழும்வேளை சம்பவம்

தென்மராட்சி,ஜுலை5

இருள்சூழும் வேளையில் தோட்ட வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவரை மடக்கிப்பிடித்த மூவர், அவருக்கு நஞ்சுத்திராவகத்தைப் பருக்கிப் படுகொலை செய்ய முயன்ற சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு தென்மராட்சி கிழக்கு கெற்பேலியில் இடம் பெற்றுள்ளது.

நஞ்சு பருக்கப்பட்ட நபரை படையினர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

கெற்பேலி மத்தியைச் சேர்ந்த கனகரத்தினம் அருள்ரத்தினம் (வயது 27) என்பவரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

தோட்டம் ஒன்றினை குத்தகைக்கு எடுத்த பிரச்சினையினால் சிலர் தன்னைக் கொலை செய்ய முயற்சி செய்திருக்கலாம் அவர் தெரிவித்துள்ளார். (ம-117)

## முதல் திருப்பலி

இளவாலை,ஜுலை5

பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் குருவாக திருநிலைப் படுத்தப்பட்ட பங்குமகன் அருட்திரு. அ.யோசப் ஜெயசீலனினால் முதல் திருப்பலி நிறைவேற்றப்படவுள்ளது. (க-48)

## கருத்தரங்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஜுலை5

தென்மராட்சி பிரதேச சுகாதாரத் தொண்டர்களுக்கான கருத்தரங்கும் பயிற்சியை முடித்த தொண்டர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை புலோலி பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

ஈபிடிபியின் தென்மராட்சிப் பொறுப்பாளர் ஆ.அலெக்சாண்டர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைத்து சுகாதாரத் தொண்டர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சுகாதாரத் தொண்டர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ம-6-117)

## விளக்கமறியல் நீடிப்பு

தென்மராட்சி,ஜுலை5

மிருசுவில் படுகொலைகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 14 படையினரும் நேற்று சாவக்சேரி நீதிவான் பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-117)

## குருபூர்ணிமா விழா

கோப்பாய்,ஜுலை5

கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தில் இன்று வியாழக்கிழமை குரு பூர்ணிமா விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பஜனை, தியானம், ஆத்மீக சாதனைகள் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகள் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (ம-72)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 12 - 03 - 1929

மறைவு 06 - 06 - 2001

## நாகலிங்கம் தனபாலசிங்கம்

எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா இறை அடியில் இன்பம் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் மறைவின்போது உதவிய, துயர்பகிர்ந்த அன்பர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். நாளை (06-07-2001) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை தம்பிநாதன், உறவினர்.

தற்போதைய முகவரி:-
*பிள்ளையார் கோயில் முன்ஒழுங்கை ஊரெழு.*

*முத்து பவனம் மீசாலை தெற்கு*

(C/17307)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் பரதாசன்

(இளைப்பாறிய அரச களஞ்சியப் பாதுகாவலர்)

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிர மணியம் பரதாசன் கடந்த செவ்வாயன்று (03.07.2001) கொழும்பில் காலமானார்.

அன்னார் பத்மினிதேவியின் அன்புக் கணவரும் மகேந்திரதாசன், ரவீந்திரதாசன், மகேஸ்வரதாசன், திருமதி கௌரி நாகராசா, ஈஸ்வரதாசன், நடேஸ்வரதாசன், விஸ்னுதாசன், காலஞ்சென்ற கணேஸ்வரதாசன், சர்வேஸ்வரதாசன், திருமதி உதயகுமாரி ஜோதிபாலா ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2001) வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*218/2, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.*

(C/17308)

தகவல்:
கௌரி (மகள்)

## திருமதி முருகேசு சின்னத்தங்கம்

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு சின்னத்தங்கம் நேற்று (04.07.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்(C.T.B), அன்னபூரணம், சிவராஜா மற்றும் அம்பலவாணர்(இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), சின்னத்துரை(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாக்கியம் (கனடா), விஜயராணி(புதுக்குடியிருப்பு), காருணியதேவி, வசந்தநாயகி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவகுமார் ஜெயலட்சுமி(ஜேர்மனி), உதயதர்சன்(சுவிஸ்), குணசீலன்(ஜேர்மனி), குணதர்சினி (புதுக்குடியிருப்பு), சஞ்சீவ், குகராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.07.2001) வியாழக்கிழமை 12 மணிக்கு 24/6 கல்லூரி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24/6, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.*

(89785)

தகவல்:
அம்பலவாணர்
(மகன்)

## சின்னையா செல்வராசா (செல்லக்குட்டி)

(முன்னாள் கணக்காளர், ப.நோ.கூ.சங்கம் - சுன்னாகம்)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்வராசா நேற்று (04.07.2001) புதன் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

இவர் திருமங்களத்தின் அன்புக் கணவரும் சின்னையா - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் - அன்னலஷ்சுமி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'லஷ்சுமி வாசா',
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.*

(C/17310)

தகவல்:
சு.வெற்றிவேலாயுதம்
(மைத்துனர்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் சிவசம்பு சிவயோகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற பிரதி பிரதம தபாலதிபர், யாழ்ப்பாணம்)

மனிதனாக: 20.11.1937

தேவனாக: 05-06-2001

கோடையிடி இடித்ததுவோ ககனம் குலங்கியதோ!
காலனுக்கு அவசரமோ கனிதவறிப் பறித்தானோ?
சாடையாகத் தெரிந்திருந்தால் கூற்றுவனை விடுவோமோ?
விதியினிலே பழிபோட்டு விம்முகின்றோம் விதிர்க்கின்றோம்!

பதற்றம் எதுவுமின்றி வாழ்வொழுங்காய் வாழ்ந்தவரே!
பதவிகள் பல பெற்றும் பண்புதனைக் காத்தவரே!
இதமாய்க் கதை சொல்லும் இன்முகத்தால் கவர்ந்தவரே!
இதயத்துக் கோயிலிலே போற்றுகின்றோம் புண்ணியரே!

இன்று (5.07.2001) வியாழக்கிழமை அமரரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.*

(89784)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விஞ்ஞான பீட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை - கடந்த 2ஆம் திகதி இரவு 8.00 மணியளவில் காரைக்காலில் உள்ள வீதித்தடை நிலையத்தில் நின்ற படையினர் இரு சிவிலியன்கள் சைக்கிளில் வருவதை அவதானித்ததாகவும் -

அவர்களை விடுதலைப் புலிகள் எனச் சந்தேகித்த படையினர் சைக்கிள்களை நிறுத்துமாறு உத்தரவிட்டதாகவும் -

அதனை அடுத்து சைக்கிள்களில் வந்தவர்களில் ஒருவர் சைக்கிளை விட்டுவிட்டு தப்பியோடிவிட்டதாகவும் -

மற்றைய நபரான கிருஷ்ணசாமி திவ்வியன் படையினரிடம் சரணடைந்ததாகவும் -

விசேட ஊடகத் தகவல் மையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

படையினர் அந்த இடத்தில் இருந்து இரு சைக்கிள்களையும், பழைய உரப்பை ஒன்றுக்குள் இருந்த ரி- 81 ரக துப்பாக்கியையும் 11 ஆயிரத்து 70 ரூபா பணத்தையும் மீட்டதாகவும்-

மேற்படி சம்பவத்தில் தப்பியவரை புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர் எனவும் -

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ம-6-86)

## மாணவன் விடுவிக்கப்படும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக்காலமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான இராணுவ அச்சுறுத்தல்களும் கெடுபிடிகளும் அதிகரித்து வருகின்றன. தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இராணுவ ஆக்கிரமிப்புக் கொடுமைகளை உலகறியச் செய்யும் பணியில் ஈடுபட்டுவரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பாரிய மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக எமது பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் சென்ற ஆண்டுச் செயலாளரும் விஞ்ஞானபீட இறுதி ஆண்டு மாணவருமான கிருஷ்ணசாமி திவ்வியன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவவர்களின் கருத்துச் சுதந்திரத்தை இராணுவ இயந்திரத்தின் மூலம் அடக்குவதற்கு தற்போதைய அரசு முனைந்து வருகின்றது என்பதனையே இது எடுத்துக் காட்டுகின்றது. கைது செய்யப்பட்ட மாணவன் விடுவிக்கப்படும்வரை எமது மாணவப் போராட்டத்தை நாம் தொடர உளளோம். அனைத்துப் பல்கலைக்கழகச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டு மாணவர்கள் தமது விரிவுரைகள் யாவற்றையும் பகிஷ்கரிக்க உள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அனைத்து மாணவர்களும் ஒன்றுகூடி கைது செய்யப்பட்ட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் விடுவிக்கப்படும் வரை எமது உணர்வு பூர்வமான எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடரத் திட்டமிட்டுள்ளோம்.

மாணவர்களுக்கு எதிராக இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய மனித உரிமை மீறல்களை மனித உரிமை அமைப்புக்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பது எமக்குக் கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தி நிற்கின்றது. இவ்வாறான - மாணவர்களுக்கு எதிரான - இராணுவ அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் மாணவர்களை அஹிம்சை வழியிலான பாரிய வெகுஜனப் போராட்டத்திற்கு இட்டுச் செல்ல வழிவகுக்கும் - என்றுள்ளது.

இதேவேளை -

அனைத்துப் பீட மாணவர்களையும் இன்று காலை பல்கலைக்கழகத்துக்குத் தவறாது சமுகம் தருமாறும் அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ம)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறிய மாணவர்களும் ஊழியர்களும் இதனால், பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேற முடியாது அதற்குள்ளேயே கும்பல் கும்பலாக நின்றனர். மாணவர்களும் ஊழியர்களும் வெளியேறியதால் வகுப்பறைகளும் அலுவலகங்களும் வெறிச்சோடிக் கிடந்தன.

பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது பல்கலைக்கழக வாசல் பக்கத்துக்கு வந்த யாழ்.பொலீஸ் நிலைய பொலீஸ் அத்தியட்சகர் வாயில் கதவுகள் பூட்டப்பட்டிருந்ததால் உள்ளே வரமுடியாது வெளியேயே காத்து நின்றார். மாணவனது கைது விவகாரம் தொடர்பாகத் தான் துணைவேந்தருடன் பேச வேண்டும் என்று அவர் கேட்ட போதும் கதவுகளைத் திறந்து விடுவதற்கு மாணவர்கள் மறுத்து விட்டனர்.

இதனை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்து வந்த துணைவேந்தர், வாயில் கதவுகளின் உட்புறம் நின்றவாறே வெளியே நின்ற பொலீஸ் அதிகாரியுடன் பேசினார்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் சிலரின் பெயர்கள் அடங்கிய பட்டியலைத் துணைவேந்தரிடம் வழங்கிய பொலீஸ் அதிகாரி அவர்களையும் அழைத்துக்கொண்டு பிற்பகல்3.00 மணிக்குப் 512 ஆவது படையணித் தலைமையகத்துக்கு வருமாறு கூறிவிட்டுச் சென்றார்.

பிற்பகல் 3.00 மணியளவில் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகச் செயலாளர் யோ.மோகனதாஸ், பீடாதிபதிகள் அ.சண்முகதாஸ், க.குமாரவடிவேல் மற்றும் 12 மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு 512 ஆவது படையணித் தலைமையகம் அமைந்துள்ள ஞானம்ஸ் ஹோட்டலுக்குச் சென்று 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர மற்றும் பொலீஸ் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசியது. சுமார் 2 மணி நேரம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மாலை 5மணியளவில் துணைவேந்தர் மற்றும் விஞ்ஞான பீடாதிபதி குமாரவடிவேல், மாணவர் பிரதிநிதிகள் நால்வர் ஆகியோர் காங்கேசன்துறைக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன் திவ்வியனைச் சந்தித்தனர்.

தனது விடுதலைக்கு உதவுமாறு அப்போது அவர் துணைவேந்தரிடம் கோரிக்கை விடுத்தார் - அவரது உடலில் அடி காயங்களுக்கான அடையாளங்கள் காணப்பட்டதாகச் சில மாணவப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் நுழைந்த படையினர், அங்கிருந்த திவ்வியனின் அறையை உடைத்துக் கடும் சோதனை நடத்தினர். (ம-6-86-15)


சுனில் ஆட்ஸ்

26.06.2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

09.07.2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

Video Cassette கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்

277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/17306)

*Note:-*

1. A.R.Rahmanஇன் Hindi புதிய ஓடியோ CDக்கள் விற்பனைக்கு உண்டு.
2. MP3 Hindi, Tamil CDக்கள் விற்பனைக்கு உண்டு.
3. Video Cassetteஇல் இருந்து CD க்கு பதிவு செய்து தரப்படும்
4. Computerக்கான உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு.


## நம்பிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டிருந்தபடி எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் விவாதத்தை நடத்த முடியாது. அத்தினங்களில் நாடெங்கும் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட இருப்பதால் அத்தினங்களில் நாடாளுமன்று கூட்டப்படாது என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் விவாதத்தை எதிர்வரும் 17ஆம் திகதியிலிருந்து நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியாகத் தெரிவித்தார். இதனால் விவாதத்தை எப்போது நடத்துவது என்பது குறித்துத் தீர்க்கமான முடிவு எட்டப்படாமலேயே நேற்றைய கூட்டம் முடிவடைந்தது. (ம)

## அவசரகால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் காலாவதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தகைய நிலையில் ஏற்படக்கூடிய பாதுகாப்பு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான வழிவகைகள் குறித்து அரசு தற்போது ஆராய்ந்து வருகின்றது.

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாததால் அது காலாவதியாகும் போது ஜனாதிபதி வர்த்தமானிப் பிரகடனம் மூலம் அந்த அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஓர் உத்தரவைப் பிறப்பிக்கலாம். எனினும் அந்த உத்தரவுப்படி அவசரகாலச் சட்டம் இரண்டு வாரங்களுக்கே நீடிக்கப்பட முடியும்.

தொடர்ந்தும் அதனை நீடிப்பதானால் அடுத்த இரண்டு வார காலத்துக்குள் அவசரகாலச் சட்டப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

நாடாளுமன்றில் அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டதால் நாடாளுமன்றக் கூட்டத்தை நடத்தி அதில் தனது பெரும்பான்மை இழப்பு பற்றி நிரூபணமாவதையோ அதன் காரணமாக ஆட்சி கைமாறுவதையோ அரசுத் தரப்பு விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

இக்காரணத்தினால் -

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஒரு வருடம் பூர்த்தியாகி, அதன்பின் நாடாளுமன்றைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவதற்கான அதிகாரத்தைத் தாம் பெறும்வரை தற்போதைய நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கவும் -

அவசரகாலச் சட்ட விதிகளை நீடிப்பதற்கான பிரேரணைகள் குறித்து ஆராய்வதற்காக மாதத்துக்கு ஒரு முறை மட்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டவும் -

ஜனாதிபதி உத்தரவிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## ஹர்த்தாலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை என்று தெரிவித்து இராணுவத்தினரின் வற்புறுத்தலை நிராகரித்தனர் பத்துக் கட்சிக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள்.

இந்தச் சந்திப்பில் பங்குகொண்ட ஈ.பி.டி.பி. பிரதிநிதியான என்.திரிலோகநாதன், இந்தக் ஹர்த்தாலுக்குத் தாங்கள் ஆதரவு இல்லை என்றும் -

எனினும் ஹர்த்தாலுக்கு எதிராகத் தாங்கள் அறிக்கை எதனையும் விடமாட்டோம் என்றும் - தெரிவித்தார்.

புலிகளால் புரியப்படும் அட்டூழியங்களையும் இந்தக் ஹர்த்தாலை ஏற்பாடு செய்தவர்கள் எதிர்ப்பார்களேயானால், அந்தக் ஹர்த்தாலுக்குத் தங்களது ஆதரவு கிட்டும் என்றும் என்.திரிலோகநாதன் கூறினார்.

இதற்கிடையில் -

இந்தக் ஹர்த்தாலுக்கு பொது மக்களின் ஒத்துழைப்பு வழங்கக் கோரும் துண்டுப்பிரசுரங்களை மானிப்பாய்ப் பகுதியில் விநியோகித்த கூட்டணி ஆதரவாளர்கள் நால்வர் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலீஸ் காவலில் அடைக்கப்பட்டனர்.

எனினும் ஹர்த்தால் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான யாழ்நகர மேயர் என்.ரவிராஜ் நேற்றிரவு மானிப்பாய் பொலீஸ் நிலையத்துக்குச்சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உரையாடி, இந்த ஐந்து உறுப்பினர்களையும் பொலீஸ் காவலில் இருந்து விடுவிக்க ஏற்பாடுகளைச் செய்தார். (உ)

## தமிழ்ப்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கின்றனர்.தமிழ்ப் பெண்களின் கற்பையும், மானத்தையும், வாழ்க்கையையும், உயிரையும் கூடப் பறிக்கின்ற இக்கயவர்களுக்கு அவசரகாலச் சட்டங்களும் அரசும் பாதுகாப்பு அளிப்பது நியாயமானதா?

தமிழ்ப்பெண்களுக்கு எதிரான இக்கொடிய பாலியல் வன்முறைக் கலாசாரத்தைத் தடுத்து நிறுத்தவும், தமிழ்ப் பெண்குலத்திற்குப் பாதுகாப்பு வழங்கவும் இன்றைய அரசு தவறிவிட்டது.

இந்த அரசின் காவலர்களின் பாலியல்வல்லுறவுக் கலாசாரத்திற்கு இறுதியில் பலியாக்கப்பட்டவள்தான் மலையகத் தமிழ்ப்பெண். ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் இக்கலாசார அழிவு வந்திடும் வரை நாம் காத்திருக்கலாமா?

எனவே தான் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட பத்துக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் அமைப்புக்கள் நாளை வெள்ளிக்கிழமை அரச காவலர்களின் பாலியல் வல்லுறவு, சித்திரவதைக் கொடுமைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிரான நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளன. இத்தினத்தில் வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் அனைத்து மனித நேயமுள்ள மக்களும் பூரண வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தித் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

ஜனநாயக வழிகளில், அமைதியான முறையில் மக்கள் தங்கள் எதிர்ப்பை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தும் வகையில் இந்த அறவழிப் போராட்டத்தை நடத்துமாறு வேண்டுகின்றேன்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இந்தக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கருணாநிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடல் சுகவீனம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் அவர் விடுவிக்கப்படுவதாகவும் -

எனினும் அவருக்கு எதிரான ஊழல் வழக்கு விசாரணை தொடரும் எனவும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்றுமாலை அறிவித்தார்.

விடுவிக்கப்பட்டதும் கருணாநிதி அண்ணாசாலையில் உள்ள தி.மு. கழகத்தின் அலுவலகமான அறிவாலயத்துக்குச் சென்று அங்கு பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

கைது செய்யப்பட்ட சமயம் தாம் தாக்கப்பட்டு, பலவந்தமாக இழுத்து வரப்பட்டு, பந்தாடப்பட்டதை அவர் சம்பவத் தொகுப்பாகப் பத்திரிகையாளர்களுக்கு விளக்கினார்.

பொலீஸாருக்கென தனி ஆணைக் குழுவொன்றை அமைத்துக் கொடுத்த தன்னை, இந்தப் பொலீஸ் அதிகாரிகள் இழுத்து விழுத்தி தரக்குறைவாக நடத்தியதாக மிகுந்த வேதனையுடன் கருணாநிதி குறிப்பிட்டார்.

கைது செய்யவந்த பொலீஸார் தனிப்பட்ட கோபத்துடன் தன்னைக் கையாண்டதைத் தன்னால் அவதானிக்க முடிந்ததாகவும் அவர் சொன்னார். தமக்கெதிரான இந்த வழக்கு இன்னும் நிலுவையில் இருப்பதால் அதனைச் சந்திக்கத் தான் தயாராக இருப்பதாகவும் கருணாநிதி அறிவித்தார். (உ)


We Serve

*போயா தினமாகிய இன்று (05-07-2001)*

திரைப்படக் காட்சி

யாழ்.லயன்ஸ் கழகம் நடத்தும்

நலிவுற்றோர் நல்வாழ்வுக்கான நிதியுதவிக் காட்சி.

*இடம* :- சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்கு

*காட்சி நேரம்* :- 10.30 - 2.00

ரிக்கற் திரையரங்கில் பெறலாம்.

*உங்கள் ஆதரவையும் அன்பளிப்பையும் வழங்குங்கள்!*

யாழ். லயன்ஸ் கழகம்

*விளம்பர உதவி:-*

பழைய, புதிய சினிமா CD படங்களுக்கு

விஷ்ணு வீடியோ,

*கோண்டாவில்.*

(89776)



Institute of Business Management Studies

Module Examination - Ms Excel

எமது நிறுவனத்தில் Ms Excel கற்கைநெறிகளை மேற்கொண்டு இதுவரை இப்பாடநெறிக்கான பரீட்சைக்கு தோற்றாத அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான பரீட்சை எதிர்வரும் 08.07.2001 ஞாயிறன்று எமது நிறுவனங்களில் நடைபெறும். இதற்கு தோற்றுவோர் 08.07.2001க்கு முன்னர் தமது பதிவினை அலுவலகத்தில் மேற்கொள்ளவும்.

Director(Ad). IBMS Jaffna Chankanai



09.07.2001ல் புதிய பிரிவுகள் ஆரம்பம்

Certificate Courses

Ms Word
Ms Excel
Ms Access

Special Offer ...
முதல் 20 நபருக்கு பதிவுக்கட்டணம் இலவசம்.

Programming Languages
Java 1.1
Visual Basic 6.0

Diploma Courses
Diploma in Ms Office
Diploma in Information Technology

IBMS
No.701 K.K.S Road,
Jaffna.
Phone: 021-3165

ஒவ்வொரு கற்கை அலகிற்கான பயிற்சிக் கட்டணம் 750/=.

Email: ibmsjaf@yahoo.com
ibmsjaf@altavista.com



IBMS IT MARKET

Intel நிறுவனத்தின் Latest வெளியீடான அதிநவீன கணனிகள் மலிவு விலையில் 1000 MHz (1 GHz) Processor ல் இருந்து விற்பனைக்கு உண்டு.

மற்றும் துணை உபகரணங்கள்

UPS, Epson LQ-300 Printer, Scanner [Genius], Mother Board, Ram,Hard Disk, SubWoofer, Floppy Disk இன்னும் பல

IBMS IT MARKET No.701 K.K.S Road, Jaffna. Phone: 021-3165


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.